# அம்பாறை
# கல்லோயா இந்து பரிபாலன சபையின்
# 37 வது மகாசபை மாநாடு

(05.07.2009, ஞாயிற்றுக்கிழமை)



## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
## அம்பாறை

(எச் ஏ / 5 / ஏ எம் / 92)

தொ.பே. இல :- 063 - 2223538

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை

# கல்லோயா இந்து பரிபாலன சபையின்

## 37 வது மகாசபை மாநாடு



## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்

## அம்பாறை

(எச் ஏ / 5 / ஏ எம் / 92)

தொ.பே. இல :- 063 - 2223538

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பு

## அம்பாறை கல்லோயா இந்து பரிபாலன சபையின்

## 37வது மகாசபைக் கூட்டம் - 2009.

மேற்கூறிய மகாசபைக் கூட்டம் முகிழ்க்கும் ஆடிமாதம் 05ம் திகதி (2009.07.05) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு, அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் கௌரவ தலைவர் வி. கருணநாதன் (PD) தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுச் சபைக் கூட்டத்தில் தவறாது பங்குகொள்ள வரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

இம்மகாசபையில், சமர்ப்பித்து ஆராய்ந்து முடிவெடுக்க – ஆலய அபிவிருத்தி தொடர்பான – இந்து சமய எழுச்சி தொடர்பான – யோசனைகள் முன்மொழிவுகளாக வரவேற்கப்படுகின்றன. சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் சுருக்கமாக எழுதி, 2009.06.30க்கு முன்பதாக செயலாளரிடம் சேர்ப்பிக்கவும்.

இத்துடன் மகாசபைக் கூட்ட நிகழ்ச்சி நிரல் இணைக்கப்பட்டுள்ளது.

கூட்ட முடிவில் மதியபோசனம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**நன்றி! வணக்கம்!**

அன்புடன்,

என். மணிவாசகன்,
கௌரவ செயலாளர்,
இந்து பரிபாலன சபை,
ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்,
அம்பாறை.
063 – 2223538

19.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணபதி துணை.

# வருடாந்த பொதுக் கூட்டம் (2009)

## கல்லோயா இந்து பரிபாலன சபை - அம்பாறை

அன்புடையீர்,

எதிர்வரும் ஆடி மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (05.07.2009) மேற்படி சபையின் பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரும்படி அன்பாய் வேண்டுகின்றேன்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் சுருக்கமாக எழுதி 2009.06.30ந் திகதிக்கு முன்பதாக செயலாளரிடம் சேர்ப்பிக்கவும்.

### மகாசபை கூட்ட நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம் - (தேவாரம்)
02. வரவேற்புரை - செயலாளர்
03. தலைமையுரை - தலைவர்
04. ஆண்டறிக்கை - செயலாளர்
05. நிதியறிக்கை - பொருளாளர்

**தேனீர் வேளை**

06. பிரேரணைகள் ஆராய்தல்
07. நடப்பு வருட ஆட்சிக்குழு தெரிவு
08. புதிய உரை - i. தலைவர் ii. செயலாளர் iii. பொருளாளர்
09. நன்றியுரை (செயலாளர்)

கல்லோயா இந்து பரிபாலனசபை,
பிள்ளையார் கோவில்,
அம்பாறை.
20.06.2009

இங்ஙனம்,
செயலாளர்,
க.இ.ப.சபை.
ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில்,
அம்பாறை.

தொ.பே.இல: 067 2277696
077 9695383



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோயா இந்து பரிபாலன சபையின் 37வது மகாசபை மாநாடு (05.07.2009 ஞாயிறு)

## தலைவர்/ செயலாளர் கூட்டறிக்கை

பேரன்புமிக்க சபை உறுப்பினர்களே!
கண்ணியம் மிக்க பெரியார்களே!
ஐங்கரன் ஆலயத்து அபிமானிகளே!

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக 02-04-2006ல் நடைபெற்ற ஆலய மகாசபையின் சந்திப்பிற்குப் பின் - இன்று 05.07.2009ல் எமது மகாசபை கூடுகின்றது.

இனிய காலை வணக்கம் எல்லோருக்கும் உரியதாகட்டும். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் அற்புதமான அம்சங்களடங்கிய வரலாற்றுப் பெருமை மிக்க இவ்வாலயத்தின் 37 வது மகாசபைக்கூட்டம், இங்கு நடைபெறுகின்ற இந்த இனிய வேளையிலே, இங்கு வருகை தந்திருக்கின்ற இந்த பழம் பெரும் இந்துக்கோவிலின் பால் பற்று - அபிமானம் - ஆர்வம் - அக்கறை - கொண்ட அடியார்களின் கவனஈர்ப்புக்காக இதயத்தைத் தொடும் செய்திகள் சிலவற்றை கூறி வைப்பது எமது பொறுப்பு - கடமை என எண்ணுகின்றோம். தொடர்கதை போலே - தொடர்ச்சியாக இனங்களுக்கிடையே மூளும் கசப்பான நிகழ்வுகள் - அமைதியற்ற சூழ்நிலை காரணமாக - ஆலய நிருவாகம் - முகாமைச் சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத துர்பாக்கிய நிலைமையால் மகாசபை கூட்டங்களும் காலத்துக்குக் காலம் பின்தள்ளப்பட்டன என்பது வரலாறு...!

தெளிந்த சிந்தனை, சீர்தூக்கிப் பார்க்கும் பகுத்தறிவு, நியாயத்தை எடைபோடும் பக்குவம், நேர்மை, சத்தியம், தியாகம் இவற்றுக்கு தலைவணங்கும் பண்பு, அற்ப ஆசை - அகங்காரமற்ற மானிடப்பண்பாடு, "நான் ஓர் இந்து" என்று ஓங்கி உயர்ந்து நிற்கும் மனத்தூய்மை - திடம் கொண்டவர்களாக இருந்து, எங்களின் கருத்தைச் செவிமடுக்கும்படி மிகத் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

அன்று, இப்பெருமைமிக்க கோவிலை உருவாக்கிட தனித்தும் ஒருமித்தும் இனமதபேதமின்றி பாடுபட்ட மக்களை; தொழில் ரீதியாக இம்மண்ணில் காலூன்றிய தமிழ் அதிகாரிகளை; தொழிலாளர்களை; வளத்தாப்பிட்டி, அம்பாறை, மல்வத்தை, வீரமுனை, சம்மாந்துறை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மண்டூர், நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, திருக்கோவில், தம்பிலுவில், மல்லிகை தீவு, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு போன்ற அல்லை - அயற் கிராமத்தவர்களை; அவர்தம் சேவைகளை; நெஞ்சிலிருத்தி நன்றிப் பெருக்குடன் இங்கே உங்கள் முன் நிற்கின்றோம். யாழ்மண்ணீன்ற பக்த சீலர்களையும் எண்ணி நன்றிப்பெருக்குடன் தலைவணங்கி நிற்கின்றோம்.

காடாக - மலையாக - மடுவாகக் கிடந்த இந்த இடத்தை, ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்- எம்பெருமானின் அனுக்கிரக கடாட்சத்தால்-யாழ் மண் தந்த பக்த ஞானிகளின் பக்திப் பரவச நாட்டத்தால்-அவர்தம் நம்பிக்கைகளை எல்லாம்-நிறைவேற்றி, எவ்வித விக்கினங்களும் வராது தடுத்தாட்கொண்ட, தும்பிக்கையானின் பெருமைக்கோர் கோவில் நிறுவிட, சக்திதனைக் கொடுத்து, காட்டை அழித்திடவும், மலையைத் தகர்த்திடவும், மடுவை நிரப்பிடவும் வல்லமையளித்து, இன்று வரலாறு பூத்தவொரு பேராலயமாக இதை நாம் காண்பது கனவல்ல;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஜமேயாகும்! இதற்கு ஒரு நிஜமான வரலாறு உண்டு. அத்தகைய பெருமைக்குரிய கோவிலை... இவ்விடத்தில் நிறுவிட அயராது பாடுபட்ட அனைத்து அன்பர்களையும், அதிகாரிகளையும், கல்வி மான்களையும், அர்ப்பணிப்புச் சேவைகளைச் செய்தவர்களையும்; நாம் இன்று இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைத்துப்பார்க்க வேண்டும்.

நீண்ட வரலாறு படைத்த இந்த இந்துக்கோவிலானது இன்று இத்தனை கம்பீரமாக எழுந்து நிற்பதற்கும் பல தசாப்தங்களாக கும்பாஷேகம், சங்காபிஷேகம் திருவிழாக் கோலம் காணாது கட்டட இடிபாடுகள் மத்தியிலே சாக்காடு போல காட்சியளித்து அம்பாறை வாழ் தமிழ் இந்துக்களின் பார்வையே படாது இருண்டு கிடந்த இவ்வாலயம், இப்போது இங்கே இத்தனை கவர்ச்சியாக எழுச்சியுடன் வளர்ச்சி பெற்று பக்த அடியார்கள் மத்தியிலே பரவசத்தை - பயபக்தியை, ஏற்படுத்தியிருக்கும் இச்சூழலை வழங்கிய எம்பெருமான் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையாரின் அற்புதத்தை என்னவென்று எழுதுவது? பேசுவது? கடந்த காலத்தில் ஆண்டாண்டு தோறும் ஏற்பட்ட இனரீதியான வன்முறைகளால் ஆலயமும் அதன் சொத்துக்களும் நிருவாகச் செயற்பாடும் சுக்கு நூறான சோக வரலாறு யாருக்கும் தெரியாத இரகசியமல்ல. மனிதருள் சில நல்ல மாணிக்கங்களின் அயராத - தளராத - துவளாத - துணிகரமான தொடர்புகளினால் இன்று இந்த மண்டபத்தில் நாம் இந்துக்களாக சங்கமித்திருக்கின்றோம். இன்று நிலவும் சமாதான சூழ் நிலையால் நாம் தெய்வ சந்நிதியில் சேர்ந்திருக்கின்றோம்.

வேறு ஆலயங்களுக்கு கிடைக்க முடியாத "மனித பொக்கிஷங்கள்" இங்கு பரிபாலனசபையாக உருவெடுத்து மகத்தான தொண்டாற்றி இக்கட்டான கால கட்டங்களில் பயங்கரவாதம் தலைதூக்கி நின்ற காலகட்டங்களில் அபிவிருத்திப் பணிகளை அடையாளங்கண்டு அர்ப்பணிப்புத்தன்மையோடு நிறைவேற்றி நிற்கின்ற இந்த சபையின் கண்ணியத்தை - யதார்த்த நிலமையை - புரிந்துகொள்ள மறுக்கின்ற, புழுதிவாரி வீசுகின்ற, புல்லுருவிகளும் எம்மத்தியிலே இந்துக்களாக இருக்கின்றார்கள் என்பதை எண்ணி இந்து சமுதாயம் மட்டுமல்ல; கண்ணியமிக்க பெளத்த சமுதாயமும் வேதனைப்படுகின்றது! வெட்கப்படுகின்றது! இது ஒரு இருண்ட காலமாக இருக்கட்டும்! மறப்போம்; மன்னிப்போம்! தூய எதிர்கால சமுதாயமொன்றைக் கட்டி எழுப்பிட, கனவு கண்டுகொண்டிருக்கின்ற தீரமிக்க இந்து இளைஞர்களே! சமயப் பெரியார்களே! முன்வாருங்கள்! சிதைந்து சீரழிந்துபோகும் இந்து சைவப் பாரம்பரியங்களை அரிய பொக்கிஷங்களை பாதுகாக்க முந்துங்கள்! பொய்மைகளைத் தகர்த்து வாய்மைகளுக்கு வாழ்வு கொடுங்கள்! அறிஞர்களை - பகுத்தறிவு வாதிகளை - ஆன்மீக வாதிகளை -சமூகத்தொண்டர்களை ஒன்று திரட்டி- தமிழ் மணங்கமழும் இந்து ஆலயமாக இதனைக் கமழச் செய்யுங்கள்! அறநெறிச் செம்மல்களை, அர்ப்பணிப்புள்ள தொண்டர்களை இனங்காணுங்கள்! முதன்மைப்படுத்துங்கள்! அவர்களுக்கு பக்க பலமாக இருங்கள்!.

முற்றுமுழுதாக தமிழர் வாழும் பகுதிகளில் - பிரதேசங்களில் இந்து ஆலயங்கள் நிமிர்ந்து நிற்பதை விட - இந்துக்களின் அருமை - பெருமை பேசப்படுவதை விட - இந்துக்களின் பாரம்பரிய விழுமியங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதை விட - ஆதியும் அந்தமுமில்லாத இந்து சமயத்தின் ஆழ - அகலத்தை வழிபாட்டுத் தத்துவங்களை அடுத்த மதத்தினர் - சோதர இனத்தவர் அறிந்துகொள்ள - புரிந்து - தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அதற்காக - அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும். பெரும்பான்மைச் சகோதர இனம்வாழும் பிரதேசங்களில் இந்து மத வழிபாட்டு முறைகள் முன்மாதிரியாக விளங்க வேண்டும். அதற்கு மெய்யடியார்கள் முன்வர வேண்டும்.

"இப்படை தோற்கின் வேறு எப்படை வெல்லும்" என்ற வாசகத்தக்கு அமைவாக அமைந்த எமது முகாமைச்சபை - வேறு எந்த இந்து ஆலயச் சபைகளிலும் இல்லாத திறமைசாலிகளை, கல்விமான்களை, அதிகாரிகளை, சாதிக்கவல்லவர்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையாளர்களைக் கொண்ட சபை என்பதை மறுக்க முடியுமா? இத்தகைய பெருமை கொண்ட சபையால் - பல்வேறு காரணங்களால் எண்ணியதைச் சாதிக்க முடியவில்லை!. ஏனெனில், நாம் வெவ்வேறு திசைகளில் திக்குகளில் - எமது கவனங்களை விட்டுவிட்டோம்.

பொறுப்புகளை ஏற்கும் திடசித்தம் கொள்ளுங்கள்! அர்பணிப்புச் சேவை செய்ய ஒன்று சேருங்கள்! இந்து ஆலயத்தின் - மதத்தின் சீரைச் - சிறப்பை - பெருமையை - மகிமையை - நம்பிக்கையை - விழுமியங்களை, அடுத்த மதத்தவர் பரிகசிக்கும் படியாக நடக்கும் எந்த மனிதனாக இருந்தாலும் புறக்கணியுங்கள்! சுவாமி விவேகாநந்தர் சொன்னார் 'ஏ இளைஞனே! நீ இந்துவாக நிமிர்ந்து நில். இந்த உலகமே உன்னதுதான்' என்று.

அவர் செய்வார் - இவர் செய்வார் என்றெண்ணி இருப்பதை விட நான் என்ன செய்தேன் என்றெண்ணிச் செயற்படுவதையே காலம் கணக்கு வைக்கும் என்பதே யதார்த்தமாகும்.

இந்த கூற்று எத்தகைய உணர்வு பூர்வமானது. ஆலயத்தின் செயற்பாடுகளைப் பற்றி எழுத வேண்டிய அறிக்கையிலே இந்துவைப்பற்றி பேசுகின்றோம் என்று குறைபடாதீர்கள். இது ஓர் இந்து ஆலயம் அல்லவா? இந்த உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட வேண்டும். இதன் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும், நமது கண்களில் நாமே குத்தி கொள்வதா? நாம் எமக்கென் கம்பீரமாக இம்மண்ணின் நடுவே உயர்ந்து நிற்கும் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக அபிவிருத்தகிகாக என்ன செய்தோம்? நாம் எத்தகைய பங்களிப்பைச் செய்தோம்? என்பதையிட்டு எண்ணிப் பாருங்கள்.

'எத்தனைபேர்களைப் பகைத்தோம்- எதிர்த்தோம் -என்பதைவிட எத்தனை பேர்களுக்கு உதவினோம்- அன்புகாட்டினோம்'' என்பதையே உலகம் எதிர்பார்க்கின்றது. அன்பர்களே! பெரியோர்களே! இளைஞர்களே! புதிய தலைமையின் கீழ் எங்களது பணிகளை நாங்கள் கண்ணியமாகவும் கடமை பொறுப்புணர்வுகளோடும்: அர்பணிப்புத்தன்மையோடும் நிறைவேற்றியுள்ளோம். திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திப்பணிகள் ஏராளம் இருக்கின்றன. இதற்கு ஏறக்குறைய 40 இலட்சங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. திட்டமிட்ட பணிகள் - அட்டவணைப்படுத்திதரப்பட்டுள்ளன - இந்நூலிலே! இனிவரும் புதிய சபையினர் இவற்றை தங்கள் எதிர்காலக்குறியாக எண்ணி சாதனைகள் புரியவேண்டும். நாங்கள் எங்களது ஒத்துழைப்பை வழங்கக்காத்திருக்கின்றோம். அவற்றை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகின்றோம்.

"எண்ணித் துணிககருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு
எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்கிறார் அருட்புலவர்
வள்ளுவப் பெருமான்! உங்களது சிந்தனை - செயலுக்காக இதனைக் கூறிவிட்டு-

எமது காலப்பகுதியில் திருப்பணி வேலைகளில்; அபிவிருத்தி வேலைகளில்; முழுமையான பங்களிப்பு நல்கிய அனைத்து நிருவாக உறுப்பினர்களுக்கும் - சபை உறுப்பினர்களுக்கும் - மற்றும் நிதியுதவிய பரோபகாரிகளுக்கும்; திருவிழா உபயகாரர்களுக்கும்; மெய்யடியார்களுக்கும்; பாதுகாவலர்களுக்கும் சபையின் சார்பாக இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மகிழ்ச்சியுடன் - ஏதோ ஒருவகை மனநிறைவுடன் விடை பெறுகின்றோம்!

**வணக்கம் - என்றும் அன்புள்ள**

***வ. கருணநாதன், Engr.***
***தலைவர்***
***க.இ.ப.சபை***
***அம்பாறை***

***என். மணிவாசகன், (ஜேபி)***
***செயலாளர் க.இ.ப.சபை***
***அம்பாறை***

*28.06.2009*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில் பொருளாளர் அறிக்கை

கடந்த 01.01.2006ல் இருந்து இன்றையப் பரிபாலன சபையில் பொருளாளராகப் பணிசெய்ய எனக்குத் திருவருள் கிட்டியது. என்னால் இயன்றவரை இப்பணியைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளேன்.

குருக்கள் ஐயா, கணக்குப்பிள்ளை ஆகியோரின் வேதனங்கள் அர்ச்சனை, பூத்தட்டு போன்றவற்றில் கிடைத்த வருமானத்தில் வழங்கப்பட்டது. நித்திய பூசைகளும், நைமித்திய பூசைகளும் முறையாக நடைபெற்றன.

வருடாந்த உற்சவங்களில் கலந்து கொண்டு, பணிசெய்த தலைவர், செயலாளர், செயற்குழுவினர், அறங்காவலர்கள், அனைவர்க்கும் நான் நன்றியுடையேன்.

முன்னையப் பொருளாளரிடமிருந்து பெற்றவைகளின் விபரம் பின்வருமாறு:

| | ரூ. | ச. |
|---|---|---|
| 01. தேசிய சேமிப்பு வங்கியில் | 62,945 | 13 |
| 02. இல.வங்கி வைப்பு | 85,000 | 00 |
| 03. இல.வங்கி வைப்பு நடைமுறை கண. | 27,858 | 37 |
| 04. இல.வங்கி சேமிப்பு - 2006.06.07ல் | 26,319 | 96 |

05. ஒரு மாலை பதக்கம் - 18கரட் - 45.200கி.
06. ஒரு ஓம் பதக்கம் - 18கரட் - 2.6கி.
07. ஒரு மாலை - 22கரட் - 2.0கி ஆகியனவாகும்.

இன்றைய வங்கிக் கணக்குகளின் விபரம்

| | ரூ. | ச. |
|---|---|---|
| 01. தேசிய சேமிப்பு வங்கி - | 94,042 | 39 |
| 02. தேசிய சேமிப்பு வங்கி வைப்பு - | 65,000 | 00 |
| 03. இலங்கைவங்கி சேமிப்புக்கணக்கு - | 52,057 | 06 |
| 04. இலங்கைவங்கி நடைமுறைக்கணக்கு | 30,839 | 00 |
| 05. இலங்கைவங்கி வைப்பு | 85,000 | 00 ஆகியனவாகும். |

குருக்களுக்கு சம்பள முற்பணம் ரூ. 34,000.00 கொடுக்கப்பட்டுள்ளது. இந்து கலாசார திணைக்களத்திலிருந்து வரவாகப் பெற்றது - ரூ. 200,000.00
விளம்பரப்பலகையால் பெற்றது - ரூ. 50,000.00
நுகேகொடவைச் சேர்ந்த திரு.முனியாண்டி எனும் ஓர் பக்தரின் அன்பளிப்பு - ரூ. 50,000.00
திரு.எம். இராஜேஸ்வரன் அரசமரக் கோவில் கட்டத் தந்த முற்பணம் - ரூ. 10,000.00

தீபங்களும், அங்குசமும் செயற்குழுவின் உறுப்பினரும், அவர்களின் உறவினரும் அளித்தவை. திரு. சி. வடிவேல் ஒலிபெருக்கி ஒன்றை வழங்கியுள்ளார். அம்பாறை அரச அதிபர் பணிமனையிலிருந்து அன்பர் ஒருவர் ஒரு ஜெனரேற்றர் வழங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சேமிப்பு வங்கி வைப்பிலிருந்து கோவிலின் இரு மருங்கும் மண்டபம் அமைக்க மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. இவ்வருட உற்சவத்திற்கு இம்மண்டபம் முடிவுற்றிருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இக்கணக்குகளை சரிபார்த்துதவிய திரு. ரீ. மகேஸ்வரன், திரு. ஏ. கிருஷ்ணபிள்ளை ஆகியோருக்கு எனது நன்றி.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

அன்புடன்,

31.05.2009

சீ. விவேகானந்தராஜா (JP) TO
(பொருளாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் - அம்பாறை.
## வரவு - செலவு காசுக் கணக்கு 2008.10.01 - 2009.05.31 கணக்கறிக்கை

| வரவு விபரம் | தொகை | செலவு விபரம் | தொகை |
|---|---|---|---|
| வங்கி இருப்பு - NSB | 138,805.40 | பூசைச் செலவு (09 மாதம்) | 61,842.00 |
| கையிருப்பு | 51,033.00 | கொப்பறா கழற்றிய கூலி | 5,350.00 |
| இலங்கை வங்கிக் கணக்கு | 281,089.00 | தொலைபேசி | 1,900.00 |
| அர்ச்சனை 10/- (18 - 25) | 11,000.00 | நீர் விநியோகம் (கட்டணம்) | 9,750.00 |
| அர்ச்சனை 20/- (4 - 9) | 12,000.00 | மின்சாரம் திருத்தம் | 1,300.00 |
| பூத்தட்டு (9-34) | 224,090.00 | கோவில் வீதி துப்பரவு | 18,700.00 |
| பொங்கல், அன்பளிப்பு, விற்பனை | 47,950.00 | கோவில் திருத்த வேலை | 16,202.00 |
| திருப்பணி உண்டியல் | 151,570.00 | ஆலய குருக்கள் வேதனம் | 108,558.33 |
| வங்கி வட்டி | 5,376.99 | ஆலய குருக்கள் சம்பள முற்பணம் | 50,000.00 |
| விளம்பரப் பலகைக்கான செலவு | 50,000.00 | முகாமையாளர் வேதனம் | 57,000.00 |
| ஐயர் சம்பள முற்பணம் வரவு | 16,000.00 | ஆலயத்திற்கு வர்ணம் வாங்கியது | 18,000.00 |
| | | முகாமையாளரின் வீட்டு மரணஉதவி | 11,000.00 |
| | | சோறு சமைக்கும் இயந்திரம் | 3,000.00 |
| | | தேசியசேமிப்பு வங்கியின் நிலையான வைப்பு | 500,000.00 |
| | | தேசியசேமிப்பு வங்கியின் வைப்பு | 94,072.39 |
| | | இலங்கை வங்கிக் கணக்கு | 30,839.00 |
| | | தேசிய சேமிப்பு வங்கி அறவீடு | 415.00 |
| | | லோகநாதன் | 800.00 |
| | | கையிருப்பு | 185.67 |
| | | | |
| **மொத்தம்** | **988,914.39** | **மொத்தம்** | **988,914.39** |

BOC savings AC/ No 2176023 - Rs. 52,057.06
BOC fixed Doposit - Rs. 85,000.00
NSB fixed Doposit - Rs. 150,000.00

மாலை பதக்கம் 18 கரட் - 45.200கிராம்
ஓம் பதக்கம் 18கரட் - 2.6 கிராம்
மாலை 22 கரட் - 2 கிராம்

| தலைவர் | கணக்குப்பரிசோதகர் | பொருளாளர் |
|---|---|---|
| வ.கருணநாதன் | த. மகேஸ்வரன் | சி. விவேகானந்தராஜா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1990களில் ஏற்பட்ட வன்முறை அனர்த்தங்களுக்குப்பின் ஆலயத்தில் செய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகள்...

- நீதிமன்ற வளாகத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த மூல விக்கிரகம், ஐம்பொன்னாலான ஐங்கரன் எழுந்தருளி விக்கிரகம் மீட்டெடுக்கப்பட்டது
- தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டது அதன் இலக்கம் 063 - 23538.
- தற்காலிகமாக மின்சார வசதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- தற்காலிகமாக குடிநீர் வசதி நீர்விநியோகப் பகுதி மூலம் பெறப்பட்டது.
- வாகன சாலை, இரு அறைகளாக மாற்றப்பட்டது.
- 1993 களில் திருத்தப்பட்ட வசந்த மண்டபத்தில் விக்கிரகங்கள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு முக்கால நித்திய பூசைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
- திணைக்களங்கள் - அமைச்சுக்கள் - பொதுமக்கள் - ஆகியோருடன் தொடர்பு கொண்டு கட்டடத் புனர்நிருமாணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
- வழிபடுவோர் நலன் கருதி கோவிலுக்கு அணித்தாக மலகூட வசதி ஏற்படுத்தப்பட்டது.
- ஆலயத்தின் வெளியே - தேரோடும் பாதையை வளைத்து கல்பரவி - தார்போட்டு அழகுபடுத்தப்பட்டது.
- சுற்று மதிலுக்குப்பதிலாக தற்காலிகமாக கொங்கிறீட் தூண் வைத்து, முட்கம்பி வேலி போடப்பட்டது.
- ஆலயக்காணியின் தலைவாயிலில் கொங்கிறீற் தோரணம் நிருமாணிக்கப்பட்டு இருபெரும் இரும்புப் படலைகள் போடப்பட்டன.
- தமிழ்மக்கள் சுதந்திரமாக நடமாடும் சூழ்நிலை இல்லாத காரணத்தாலும், நிதிவசதியற்ற காரணத்தாலும் கும்பாபிஷேகம் செய்யும் நோக்கம் வருடக்கணக்காக பின் தள்ளப்பட்டு ஈற்றில் 2002 சித்திரைமாதம் 24ந்திகதி எண்ணெய்க் காப்புடன் கும்பாபிஷேகம் நிறைவேறும் பாக்கியம் கிடைக்கப்பெற்றது. 15 நாட்கள் மண்டலாபிஷேகமும் - தொடர்ந்து சங்காபிஷேகமும் நிறைவேறப்பட்டது.
- 2002ல் கும்பாபிஷேகம் ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டது முதல் வருடாந்தம் சங்காபிஷேகமும்- அதைத்தொடர்ந்து திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.
- அதைத் தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் ஆவணி (தமிழுக்கு)மாதத்தில் நடைபெற்று வருகின்றன.
- நவராத்திரி சிவராத்திரி பூசைகள் அபிஷேக மட்டத்தில் ஆலயத்தில் நிறைவேற்றுப்படுவதோடு தொடர்நதும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.
- ஆலயத்துக்கான காணி உறுதி பெறுவதற்கான தொடர்புகள் இந்து சமய அமைச்சு - அரச அதிபர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்த ஆலயமணிக்குப்பதிலாக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆலய மணி ஒன்று புதிதாக நுகேகொடவில் வசிக்கும் திரு. முனியாண்டி எனும் அன்பர், ஒருவர் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் மீது வைத்த பற்றின் காரணமாக நன்கொடை செய்துள்ளார்.
- பக்தர்களின் வழிபாட்டுக்காக ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் பலகாலமாக பக்தர்களின் கவலைகளாகவும், குறைபாடுகளாகவும் அடையாளங்காணப்பட்ட சண்டேஸ்வரர் ஆலயமும், வைரவர் ஆலயமும் ஆகம விதிப்படி அமைத்து வழிபாட்டுக்காக விடப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்யப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள்...

- சுற்றுமதில் (900') அமைக்கப்பட வேண்டும். (முன்பக்க பிரதானமதில்)
- தீர்த்தக்கிணறு அமைக்கப்பட வேண்டும்.
- பூசகர் விடுதி அமைக்கப்பட வேண்டும்.
- முகாமையாளர் விடுதி அமைக்கப்பட வேண்டும்.
- கல்யாண மண்டபம் அமைக்கப்பட வேண்டும்.
- அன்னதான மண்டபம் அமைக்கப்பட வேண்டும்.
- தேர் (அலங்கார ஊர்தி) அமைக்கப்பட வேண்டும்.
- யாத்திரிகர் சத்திரம் அமைக்கப்பட வேண்டும்.
- தளபாடங்கள் சேர்க்கப்பட வேண்டும்.
- கோவில் காணியை அடையாளப்படுத்தும் வேலி அமைக்கப்படவேண்டும்.
- ஆலய வளாகத்தினுள் வளர்ந்துவரும் அரச மரத்தைச் சுற்றி சிறிய மதில் அமைத்து, அதனுள் அம்மன் சிலை வைத்து வழிபட சிறிய ஆலயம் அமைக்கப்பட வேண்டும்.
- கொடிக்கம்பத்தை வெள்ளித் (Silver) தகடுகளால் அணிவிக்க வேண்டும்.

**(இவை சிந்தனையிலிருப்பவை)**

(நிதிவளம் மிக்க ஆலயத்தின்பால் அதீத அக்கறைகொண்ட பெரியோர்கள் - ஆர்வலர்கள் முன்வந்து இக்குறைபாடுகள் சிலவற்றை நிறைவேற்றிட உதவுமாறு கேட்கப்படுகின்றார்கள்)

### ஆலயத்தில் கடமைபுரிந்த கணக்கப்பிள்ளைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. எஸ்.இராமச்சந்திரன் | - 1970களில். | (யாழ்ப்பாணம்) |
| 02 | திரு. எஸ். மணியம் | - 1973களில் | (தெமோதர) |
| 03. | திரு. வீ. கந்தசாமி | - 1989களில் | (காரைதீவு) |
| 04. | திரு. எஸ். நடேசன் | - 1998களில் | (காரைதீவு) |
| 05. | திரு. ரி.சாமித்தம்பி | - 1998களில் | (அக்கரைப்பற்று) |
| 06. | திரு. எஸ்.தில்லைநாதன் | - 1999களில் | (காரைதீவு) |
| 05. | திரு. எஸ். சோமசுந்தரம் | - 2009களில் | |
| 06. | திரு. க. சித்திரவேல் | - 2009களில் | |

**நினைவுக்கு எட்டியவரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1993 களில் கௌரவ அமைச்சர் பி.தயாரெத்ன பா.உ.அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக அமைக்கப்பட்ட நிதி சேர்ப்புக்குழு உறுப்பினர்கள் வருமாறு

## (FUND RAISING COMMITTEE) (1993-1994)

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு கே.எஸ்.சுதசிங்க (அமைச்சரின் செயலாளர்) |
| உப தலைவர் | : | கப்டன் திசேரா( இராணுவமுகாம் - அம்பாறை) |
| செயலாளர் | : | என்.மணிவாசகன்(வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை-அம்பாறை) |
| பொருளாளர் | : | வி.மேகராஜா (தலைவர், சிறலங்கா செஞ்சிலுவைச்சங்கம் திருக்கோவில்) |
| உறுப்பினர்கள் | : | திரு.T அருட்சிவம் (இளைப்பாறிய ஏஜிஏ காரைதீவு) |
| | | திரு எஸ்.கே பத்திரண (ஆர்.எம்.சி அம்பாறை) |
| | | திரு தனசேகர (HQI) போலீஸ் - அம்பாறை |
| | | திரு. எஸ்.எஸ். ஐயர், கணக்காளர் S.L.S.C |

*(கல்லோயா இந்துபரிபாலன சபை புனரமைக்கப்படும், வரை இக்குழு இயங்கியது ஆலய நிதி சேகரிப்பு குழு என்ற பெயரில்)*

## 1995களில் அமைக்கப்பட்ட ஆலய புனரமைப்பு அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்

### (இதன் காலம் 1995 முதல் 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| கே.குணநாயகம் | (CE -RDD) | - | தலைவர் |
| தயாஅபேசேகர | (Ex.Chariman) | - | உபதலைவர் |
| வி.மேகராஜா | (Rtd.TO) | - | உபதலைவர் |
| என்.மணிவாசகன் | (-RDA) | - | செயலாளர் |
| ரி.அருட்சிவம் | (AGA) | - | உறுப்பினர் |
| தி.திசேரா, | (Capt.Army) | - | உறுப்பினர் |
| எஸ்.வி.கந்தையா | (EE -RDD) | - | உறுப்பினர் |
| எம்.தங்கவேல் | (TA -IRR.DEPT) | - | உறுப்பினர் |
| சி.வாசுதேவன் | (S.P office) | - | உறுப்பினர் |
| M.சர்வானந்தன் | (Engr.const Dept.) | - | உறுப்பினர் |
| K.அமரசேகர | (AGA) அம்பாறை | - | உறுப்பினர் |
| S.மகேசன் | (Engr.NIMO) | - | உறுப்பினர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீளமைப்புச் செய்யப்பட்ட கல்லோயா இந்துபரிபாலன சபை 1999 களில் தெரிவு செய்யப்பட்டு 2003 வரை இயங்கி வந்தது.**

**அதன் செயற்குழு வருமாறு:**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | வி.கருணைநாதன் (CE,RDD) |
| செயலாளர் | - | என்.மணிவாசகன் ஜேபி |
| உபதலைவர் | - | வி.மேகராஜா ஜேபி |
| | - | க.பத்மநாதன் (DM.NHDA) |
| | - | எஸ்.மகேந்திரன் (EE,CEB) |
| | - | க.குணநாயகம் (Rtd.CE, RDD) |
| பொருளாளர் | - | ஆர் திருச்செல்வம் (TO - RDD ) |
| | - | எஸ். சண்முகநாதன் (TO - RDD ) |

## செயற்குழு உறுப்பினர்கள்

எஸ்.பிரேமதாச
எஸ்.லோகநாதன்
எம்.அழகேந்திரன்
ஈ.நித்தியானந்தம்
பி.கணேசமூர்த்தி
கே.ஆறுமுகம்
வி.பி.சிவப்பிரகாசம்
ரி.கைலாயபிள்ளை
க.மகேஸ்வரன்
கே.சுப்பிரமணியம
ஆ.கிருஸ்ணபிள்ளை
வி.இரவிந்திரகுமார்
பி.சண்முகராஜா
எஸ்.விவேகாநந்தராஜா
என்.மகேந்திரா
எம்.பாலசுப்பிரமணியம்
த.வெள்ளையப்போடி
வி.மெய்யழகன்
பொன்.வரதராஜன்
எஸ்.துஷ்யந்தன்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லோயா இந்து பரிபாலன சபையின் நிருவாகிகள் – 2004

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ப. இராஜமோகன் - EE (RDD) |
| உபதலைவர்கள் | - | 1. க.பத்மநாதன், MP - திகாமடுல்ல |
| | | 2. த.கைலாயபிள்ளை - அக்கரைப்பற்று. |
| | | 3. வி.கருணநாதன் - செட்டிபாளையம் |
| | | 4. வி.ஜெகநாதன் - காரைதீவு |
| | | 5. வி.பி.சிவப்பிரகாசம் - அக்கரைப்பற்று |
| | | 6. கே. ஆறுமுகம் - அம்பாறை |
| | | 7. எ.சசீந்திரன் - சேனைக்குடியிருப்பு |
| | | 8. எஸ்.பிரேமதாச - கல்முனை |
| செயலாளர் | - | என்.மணிவாசகன் - அக்கரைப்பற்று. |
| உபசெயலாளர் | - | எஸ்.லோகநாதன் - காரைதீவு |
| பொருளாளர் | - | எஸ். சண்முகநாதன் - பாண்டிருப்பு |

## நிருவாகக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| த.வெள்ளையப்போடி | - நற்பிட்டிமுனை |
| ஆ.கிருஸ்ணபிள்ளை | - காரைதீவு |
| வி.இரவிந்திரகுமார் | - அம்பாறை |
| பி.சண்முகராஜா | - அம்பாறை |
| கே.பாலசுப்பிரமணியம் | - காரைதீவு |
| எஸ்.விவேகாநந்தராஜா | - பாண்டிருப்பு |
| எம்.அழகேந்திரன் | - திருக்கோவில் |
| என்.பிரசாந்தன் | - மட்டக்களப்பு |
| கே.சுப்பிரமணியம் | - கல்முனை |
| கே.மகேஸ்வரன் | - பாண்டிருப்பு |
| எஸ்.மகேந்திரன் | - கல்லாறு |
| என்.குணசிங்கம் | - காரைதீவு |
| பி.கணேசமூர்த்தி | - கல்முனை |

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் நிருவாகக் குழு

(2005 - 2006) (02/4/2006 வரை)

| பெயர் | பதவி | விலாசம் |
|---|---|---|
| 1. பி.இராஜமோகன் (EE) | கௌரவ தலைவர் | RDD-கல்முனை |
| 2. வி.ஜெகநாதன் (ADE) | உப தலைவர் | காரைதீவு |
| 3. கே.பத்மநாதன் (MP) | உப தலைவர் | காரைதீவு |
| 4. வி.பி.சிவப்பிரகாசம் (பத்திரிகையாளர்,ஜேபி) | உப தலைவர் | அக்கரைப்பற்று |
| 5. ரி.கைலாயபிள்ளை (YMHA) | உப தலைவர் | அக்கரைப்பற்று |
| 6. எ.சசீந்திரன் (DS-OFFICE) | உப தலைவர் | அக்கரைப்பற்று |
| 7. எஸ்.பிரேமதாச | உப தலைவர் | கல்முனை |
| 8. என்.மணிவாசகன் ஜேபி | கௌரவ செயலாளர் | அக்கரைப்பற்று |
| 9. எஸ்.லோகநாதன் | உப செயலாளர் | காரைதீவு |
| 10. எஸ்.சண்முகநாதன் (TO) | கௌரவ பொருளாளர் | பாண்டிருப்பு |

# செயற்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 11. எஸ்.விவேகானந்தராஜா (TO) | பாண்டிருப்பு |
| 12. பி.கணேசமூர்த்தி (TO) | கல்முனை |
| 13. கே.பாலசுப்பிரமணியம் (TO) | காரைதீவு |
| 14. ஏ.கிருஸ்ணபிள்ளை (SO) | காரைதீவு |
| 15. பி.சண்முகராஜா | அம்பாறை |
| 16. வி.இரவிந்திரகுமார் | அம்பாறை |
| 17. எம்.அழகரெத்தினம் | கல்முனை |
| 18. கே.குணசிங்கம் | காரைதீவு |
| 19. ரி.மகேஸ்வரன் | பாண்டிருப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் நிருவாகக் குழு

(02.04.2006 தொடக்கம் 04.07.2009 வரை)

| பெயர் | பதவி | விலாசம் | தொடர்பு இல |
|---|---|---|---|
| 1. திரு. வ. கருணநாதன் | தலைவர் | மட்டக்களப்பு | 026-2220685, 077-7916343 |
| 2. திரு. ப. இராஜமோகன் | உபதலைவர் | காரைதீவு | 067-2229472, 077-6653813 |
| 3. திரு. வி. மேகராஜா | உபதலைவர் | தம்பிலுவில் | 063-2229722 |
| 4. திரு. இ. நித்தியானந்தன் | உபதலைவர் | கல்முனை | 077-7035754 |
| 5. திரு. க. பத்மநாதன் | உபதலைவர் | காரைதீவு | 067-2220146 |
| 6. திரு கே. சுப்பிரமணியம் | உபதலைவர் | கல்முனை | - |
| 7. திரு. என். மணிவாசகன் | செயலாளர் | அக்கரைப்பற்று | 067-2277619 |
| 8. திரு.எஸ்.விவேகானந்தராஜா | பொருளாளர் | பாண்டிருப்பு | 067-2229827 |
| 9. திரு.வி.மெய்யழகன் | உபசெயலாளர் | கல்முனை | 067-2229472 |

## நிருவாகக் குழு உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. திரு.எஸ். பிரேமதாச | செ.கு.உ | கல்முனை | 067 - 2229645 |
| 02. திரு.கா.ஆசோகாஆறுமுகம் | செ.கு.உ | அக்கரைப்பற்று | 067 - 2277696 |
| 03. திரு.த.கைலாயபிள்ளை | செ.கு.உ | அக்கரைப்பற்று | 067 - 2277514 |
| 04. திரு.எஸ்.பாலசுப்பிரமணியம் | செ.கு.உ | காரைதீவு | 077 - 4412968 |
| 05. திரு.வி.பி.சிவப்பிரகாசம் | செ.கு.உ | அக்கரைப்பற்று | 067 - 2277377 |
| 06. திரு.என்.எஸ்.மகேந்திரன் | செ.கு.உ | கல்லாறு | 067 - 2229472 |
| 07. திரு. பொன்.கணேசமூர்த்தி | செ.கு.உ | கல்முனை | 067 - 2220090 |
| 08. திரு. எஸ்.சண்முகராஜா | செ.கு.உ | அம்பாறை | 063 - 2222289 |
| 09. திரு.எஸ்.லோகநாதன் | செ.கு.உ | காரைதீவு | 067 - 2222578 |
| 10. திரு. எஸ். கண்முகநாதன் | செ.கு.உ | பாண்டிருப்பு | 067 - 2220535 |
| 11. திரு. வி.ரவிக்குமார் | செ.கு.உ | அம்பாறை | 063 - 2223152 |
| 12. திரு. எஸ்.குணசிங்கம் | செ.கு.உ | காரைதீவு | 067 - 2222361 |
| 13. திரு.என்.கைரியராஜா | செ.கு.உ | நற்பிட்டிமுனை | 077 - 7113014 |
| 14. திரு.வி.ஜெயநாதன் | செ.கு.உ | காரைதீவு | 067 - 2250442 |
| 15. திரு. ஏ. ஆனந்தன் | செ.கு.உ | மத்தியமுகாம் | 077 - 7113171 |

## உள்ளக கணக்காய்வாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. திரு த.மகேஸ்வரன் | எண்பார்வையாளர் | பாண்டிருப்பு | 067 - 2220708 |
| 02. திரு ஏ. கிருஷ்ணபிள்ளை | எண்பார்வையாளர் | காரைதீவு | 067 - 2222616 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்ததும் - தெரியாததும்.

▸▸ இனக்கலவர காலத்தில் சில தீயவர்களால் - வெறியர்களால் தகர்க்கப்பட்ட அம்பாறை பிள்ளையார் ஆலயத்தில் இருந்த ஐம்பொன்னாலான ஐங்கரன் விக்கிரகத்தை திருடிச் சென்ற பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த இருவர் போலீசாரினால் கைதுசெய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர். விக்கிரகம் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு, பின்பு - கப்டன் திசேரா (இராணுவ முகாம் - கொண்டவட்டுவான்), தயா அபயசேகர (தவிசாளர், அம்பாறை நகரசபை), என்.மணிவாசகன் (செயலாளர், பரிபாலனசபை) ஆகியோரால் விடுவிக்கப்பட்டு, ஆலயத்துக்கு கொண்டுவரப்பட்டு வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டது. பின்பு - திட்டமிட்ட ஒரு சுபநாளில் பாலஸ்தானம் செய்யப்பட்டு, விக்கிரகம் ஆலய மகாமண்டபத்தில் - நடேசர் பீடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டது.

***

▸▸ ஆலயத்தை சேதப்படுத்தியவர்கள் - சொத்துக்களை சூறையாடியவர்கள் - விநாயகர் கற்சிலையை தீர்த்தக் குளத்தில் வீசிவிட்டு "கணதெய்யா நாண்ட கீயா" என்று பரிகாசம் செய்தவர்கள் - ஆலயத்தினுள் அப்பாவித் தமிழர்களை வதை செய்தவர்கள் - அம்பாறைக் குளத்திலேயே மீன்பிடிக்கச் சென்று அகால மரணமடைந்தார்கள் என்ற மெய் சிலிர்க்கும் தகவல்கள் பெரும்பான்மைச் சமூக வட்டாரத்தில் வியப்பாகப் பேசப்படுகின்றது.

***

▸▸ பௌத்த மக்களும் - இந்துமக்களும் - இந்த ஆலயத்தில் நடைபெறும் சமய நிகழ்வுகளில்- அனுஷ்டானங்களில் - இரண்டறக்கலந்து வழிபடுவதும் ; ஒன்றாக அமர்ந்து - அந்நியோந்நியமாக அன்னதான நிகழ்வுகளில் பங்கெடுப்பதும்; பாற்பொங்கல் பகிர்வதும்; உண்பதும்; நெஞ்சையள்ளும் காட்சிகளாகவே விளங்கும்.

***

▸▸ 1990களில் நாட்டில் பரவலாக வெடித்த இனவன்முறைச் சம்பவங்கள் அம்பாறை நகரிலும் பரவி - இரு இனங்களுக்கும் பொதுவாக ஒற்றுமைச் சின்னமாக விளங்கிய பிள்ளையார் ஆலயத்தை ஈவு - இரக்கமில்லாமல் சேதப்படுத்தி - பலநூறு இலட்சங்களுக்கு அதிகமாக நட்டப்படுத்தியதோடு - அரும்பெரும் தமிழ் - ஆங்கில நூல்களும் கிடைத்தற்கரிய விக்கிரகங்களும் எரியூட்டி நாசமாக்கப்பட்டன. இவ்வாறு ஆலயத்தையும் - ஆலயத்தின் சொத்துக்களையும் அழித்தவர்கள் - அழிந்து விட்டார்கள் என்று பய-பக்தியுடன் சிங்கள-பௌத்த மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்ததும் தெரியாததும்....

### ஆலய வரலாறு

ஈழநாட்டில் கிழக்கு மாகாணத்திலே, தமிழ்தாய்க்கு "யாழ் நூல்" தந்து அலங்கரித்த உலகம் போற்றும் அறிஞரான இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகளான முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் பிறப்பிடமான காரைதீவு என்னும் தமிழும் சைவமும் கலந்து மணம் வீசும் ஊருக்கு மேற்கே 18 கி.மீற்றர் தொலைவில் அம்பாறை என்ற ஊர் உண்டு. இவ்வூர் முன்பு மட்டக்களப்பு மாகாணத்தில் இருந்தது. மட்டக்களப்பு மாவட்டம், சேனநாயக்கா, இங்கினியாக்கலை என்கின்ற மிகப்பெரிய நீர்த்தேக்கங்களுடன் ஆன கல்ஓயா குடியேற்ற அபிவிருத்தித் திட்டச்செயற்பாடு விரிவடைந்து வந்தபோது இரண்டு மாவட்டங்களாக்கப்பட்டது. இதிலிருந்து புதிதாக அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. இதனை இன்று 'திகாமடுல்ல' என்றும் அழைப்பர்.

### பிள்ளையார் கோயில்

இக்கோயில் அம்பாறை நகரிலுள்ள பழைய குளத்தின் கிழக்குக் கரையாக உள்ளது. நல்ல இடத்தில், அழகான சூழலிலே அமைந்தது. இத்திருவாலயம் பழம் பெருமை வாய்ந்தது. பழைய அம்பாறைக் கிராமம் அம்பாறைக் குளத்தினை அண்டியே அமைந்தது. இங்கு தமிழர்கள் மிகப் பழம்காலமாக வசித்து வந்தனர். கல்ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய குடியேற்றம் நடைபெற்றது. குடியேற்றப்பட்டவர்க்கு வயல் நிலமும் குடியிருக்க மேட்டு நிலமும் கொடுபட்டன. எனவே புதிய குடியேற்றம் ஆரம்பிக்க முன்னேயே, பிள்ளையார் கோயில் இருந்து வந்தது.

### கோயிலின் வளர்ச்சி

கல்ஓயா நீர்ப்பாசனத்திட்டம் உருவாக்க அமெரிக்க நாட்டு நிபுணர்கள் வந்தனர். அம்பாறையில் செயலகம் கட்டப்பட்டது. இது தற்போது அரசாங்க அதிபரின் செயலகமாக உள்ளது. நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் சேனநாயக்கா சமுத்திரத்திற்கு பிரமாண்டமான அணைக்கட்டுக்கட்டி நீர்தேக்கப்பட ஆரம்பமாகின.

அக்காலத்தில் இவ்வேலைகள் நடைபெற்ற போது அதிகளவில் தமிழர்கள் பலபல பதவிகளில் இருந்தனர். மேலுத்தியோகத்தர்களாகவும், பல்லாயிரக்கணக்கில் தொழிலாளர்களாகவும் பணிபுரிந்தனர், சேவையாற்றினர். அப்போது இந்துக்களான தமிழர்கள் பழைய கோயிலுக்கு சீமெந்திலான கற்கட்டிடங்கள் கட்டினர். கோயிலுக்கு உள்ளும், புறமும் வீதிகள் உண்டு. குளத்தின் ஓரமாக 3½ ஏக்கர் காணி கோயிலுக்கு உண்டு. பழமை வாய்ந்த பிள்ளையாருக்கு புதுப்பொலிவுடனான கோயில் அமைத்து, பிராமணர்களை அமர்த்தி மூவேளையிலும் நித்திய பூசைகள் நடைபெற்று வந்தன.

சைவர்களுடன் பௌத்தர்களும் கோயில் தரிசனத்திற்கு பெருமளவில் வந்தனர். பௌத்தர்கள், பிள்ளையாரை "கணபதி தெய்யோ" என்பர். கதிர்காமக்கந்தன், விஷ்ணு (திருமால்) பத்தினி அம்மனையும் வழிபடுகின்ற வழக்கம் இருந்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1956 இன் பின்**

இனக்கலவரம் 1956ல் ஆரம்பித்தது. பின்பு 1977,1983,1985,1987,1990 களிலும் நடைபெற்றது. இதன் காரணமாக தமிழர்கள் பழைய கிராமத்து மக்கள், புதிய குடியேற்ற வாசிகள், அரசாங்க உத்தியோகம் பார்த்தோரும் புலம் பெயர்ந்தனர்.மேலும் அரசாங்கத்தின் அரச பணிமனை வேலைகள் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் டீஆர்ஓ.்.ஏஜீஏ கந்தோர்கள் பிரதேச செயலகங்களாக மாற்றப்பட்டன. இதனாலே எஞ்சி இருந்த தமிழ் உத்தியோகத்தர்களும் மாற்றப்பட்டனர். பொறியியல் துறைத்திணைக்களங்களின் பிரதேச பணிமனைகளில் ஓரிரண்டு இந்து தமிழர்கள் இருந்தார்கள். இப்போதும் இந்து தமிழர்கள் அற்வாறான நிலையில் தான் இருக்கின்றார்கள்.

**கோயிலின் நிலை**

1990ம் ஆண்டு ஆனி இனக்கலவரத்தின் போது கோயில் பூசகர் கொல்லப்பட்டார். கோயில் உடைக்கப்பட்டது. விக்கரகங்கள் காணாமல் போயின. கோயில் சேதமாகியது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள விகாரைகளை உடைக்கின்றார்கள் என்று மாற்று மதத்தவர்களால் பரப்பப்பட்ட பூதாகரமான வதந்திகளால் ஆத்திரமடைந்த இன வாதிகளால் ஆலயம் தகர்க்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டது. பௌத்தர்களும் இதனை வரவேற்கவில்லை. ஆலயத்தை ஆதரிக்காத இனவாதக் காடையர்களே இதனைச் செய்ததாக தாம் நம்புவதாக பௌத்தர்கள் தெரியப்படுத்தியதாக ஊர்ஜிதம் அற்ற செய்திகள் கிடைத்தன.

**பொன்னடிகள் போற்றி**


*"அம்பாறை அமர்ந்திருந்த ஐயா! போற்றி*
*அரனுமையாள் அணைத்தெடுத்த அப்பா! போற்றி*
*வெம்பாவம் தீர்த்தாளும் விமலா! போற்றி*
*வித்தகா! விறல்வீரா! போற்றி போற்றி*
*தும்பிக்கை கொண்டருள்செய் துணைவா போற்றி*
*துள்ளும் மனதைத் துடைப்பாய் போற்றி*
*நம்பிக்கை கொண்டவரின் நலமே செய்யும்*
*நாதனே! பொன்னடிகள் போற்றி போற்றி."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்

அம்பாறை பிரதேசத்தில் ஆரம்பக்குடிகள் இந்துக்கள் என்பதைக் காட்டும் தொல்பொருள் எச்சங்கள் இன்றும் காணக்கூடியதாக இருக்கும் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானம். இது நாட்டின் வரலாற்றுப்புகழ் பெற்றிருந்தமைக்கு பல சான்றுகளை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. கண்டி மன்னன் ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணம் பல வன்னிமைகளின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. இன்றுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள உகனை என்னும் இடத்தில் சிந்தார்துரை வன்னிமை இருந்து பரிபாலித்து வந்தார் என்பதற்கு சான்றாக அவர்களின் வாரிசுகள் பௌத்த இந்துக்களாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.



கல்லோயாத்திட்டம் வருவதற்கு முன்பு அம்பாறை நகர்ப்பகுதியில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையை ஜீவாதாரமாகக்கொண்டு குடியிருந்தார்கள் என்றும், அதனை அண்டியுள்ள இங்கினியாகலைப் பகுதியில் ஆதி வாசிகளான வேடுவர்கள் குடியிருந்தார்கள் எனறும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து தெரியவருகின்றது. இன்று அம்பாறைக்குளம் இருக்கும் பகுதியில் ஒரு சிவாலயம் இருந்தது என்றும் இது இலங்கை வேந்தன் இராவணன் ஆட்சிக்காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்ததாக இப்பகுதி கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் தெரிய வருகின்றது.

இந்த சிவாலயம் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டதாகவும், இதனால் அப்பகுதியில் இருந்த தமிழர்களின் தொகைகளும் குறைந்ததாகவும் கல்லோயா அபிவிருத்திச் சபை அம்பாறை பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக இங்கினியாகலை என்னும் இடத்தில் பட்டிப்பளை ஆற்றை மறித்துக்கட்டி சேனநாயக்கா சமுத்திரத்தை அமைத்து 40 குடியேற்ற கிராமங்களையும் உருவாக்கி பல தமிழ், முஸ்லீம் கிராமங்களும் சிங்கள கிராமங்களோடு அமைக்கப்பட்டு மூன்று சமூகத்தினரும் சகோதரர்கள் போல் வாழ்ந்து வந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அம்பாறைக்கு அண்மையிலுள்ள கொண்டவட்டுவான் எனும் இடத்தில் ஒரு பள்ளிவாசலும், புத்தாங்கலையில் ஒரு பௌத்த விகாரையும் அமைக்கப்பட்டும் மூன்று சமூகங்களும் ஐக்கியமாக வாழ்ந்து வந்தார்கள். அம்பாறை குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் சிலையை தமிழ் மக்கள் இன்று ஆலயம் இருக்கும் குளக்கரையில் வைத்து வழிபட்டு வந்தார்கள்.

கல்லோயாத்திட்டத்தை ஆய்வு செய்வதற்கு 1940 ம் ஆண்டில் வந்த குழுக்கள் இந்த ஆலய வீதியில்தான் முகாமிட்டு ஆய்வு செய்தார்கள் என்று அப்போது இப்பகுதியில் நீர்ப்பாசன சுப்பிறீண்டனாக இருந்த எம்.எம்.இப்ரா□ீம் என்பவரின் குறிப்பில் இருந்து தெரிவாகின்றது. இவர் சேவையில் இருந்து ஓய்வு பெற்று இந்த பிரதேசத்தின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்திற்கான பல நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி மாவட்டத்தைச் செழிக்க வைத்தவர்களில் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்லோயாத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து "கல்லோயா இந்து பரிபாலன சபை" ஒன்று அப்போது சபையின் காணி அதிகாரி க.கணபதிப்பிள்ளை தலைமையில் அமைக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு தற்போது உள்ள ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு சிறப்பாக திருவிழாக்களும் தீர்த்தமும் நடைபெற்று வந்தன. கல்லோயாத் திட்டம் முடிவடைந்து 1971 ம் ஆண்டு அரச திணைக்களங்களிடம் ஒப்படைக்கப்பட்டபின்பு க.குணநாயகம் தலைமையில் சிறப்பாக செயற்பட்டு வந்தது. 1985 ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தினால் ஆலயம் நாசமாக்கப்பட்டு தமிழ்க்குடும்பங்கள் எல்லாம் வெளியேறி பல மாதங்களாக ஆலயம் கவனிப்பாரற்றுக்போய் கிடந்தது. அப்போது அம்பாறையில் அரச சேவையில் இருந்த கவிஞர் என். மணிவாசகன் எடுத்துக்கொண்ட நடவடிக்கையினால் அம்பாறையில் முன்பு சேவை செய்து ஓய்வு பெற்றவர்களில் சிலரும் தற்போது சேவையில் உள்ளவர்களில் பலரையும் ஒன்று சேர்த்து பரிபாலன சபையை புனரமைப்புச் செய்து வட – கிழக்கு மாகாண நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாவிஷேகமும் செய்யப்பட்டு தற்போது கிழக்கு மாகாண பிரதம பொறியியலாளர் வி.கருணநாதன் தலைமையில் செயலாளர் கவிஞர் என்.மணிவாசகன், பொருளாளர் சி.விவேகானந்தராஜா ஆகியோருடன் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 25 உறுப்பினர்களுடன் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

'கலாசூரி' வி.பி.சிவப்பிரகாசம், ஜே.பி
(மூத்த ஊடகவியலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை பிள்ளையார் ஆலயம்

அம்பாறை நகரிலிருந்து மேற்காக இங்கினியாகலை வீதியில் சுமார் 200 மீற்றர் தொலைவில் இவ்வாலயம் ஓர் அமைதியான பரந்த இடத்தில் அமையப்பெற்றுள்ளது.

கடந்த இரு தசாப்த காலமாக சீரழிந்து, தூர்ந்து போயிருந்த இவ்வாலயமானது அண்மையில் 18 இலட்ச ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் வி. கருணநாதன் தலைமையிலான தமிழ் அன்பர்களைக் கொண்ட ஆலய பரிபாலன சபையினரின் துரித முயற்சியின் காரணமாக இது கைகூடியுள்ளது.

தற்போது முற்றிலும் சிங்கள மக்களைக் கொண்ட அம்பாறை நகரில் கடந்த 24.04.2002 அன்று இவ்வாயலத்தின் மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடந்தேறியது தெரிந்ததே. அன்று அம்பாறை மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு உள்ளிட்ட பல முக்கிய தமிழ், சிங்கள பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.



100 வருட காலம் பழைமை வாய்ந்த இவ்வாலயத்தை ஆரம்பத்தில் வில்லுப்பிள்ளையார் ஆலயம் என்று அழைத்தனர். இவ்வாலயத்திற்கு அருகில் அம்பாறை வில்லுக்குளம் அமைந்திருப்பதும் இக்காரணப் பெயர் வரக்காரணமெனலாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை ஒருங்கே அமையப் பெற்ற இவ்வாலயமானது காரைதீவில் சமாதியான சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் வணக்கத்துக்குரிய பிள்ளையார் சிலையாகவே ஆரம்பத்தில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கரையில் இருந்த இச்சிலையை பின்னர் துரைசாமி கவுண்டர் மலையில் வைத்து வழிபட்டு வந்தார். காட்டு மிருகங்களுக்கு பயந்து மலையில் இவ்வழிபாடு இடம்பெற்றது. பின்பு கல்லோயாக் குடியேற்றத்திட்டத்திற்கு பொறுப்பாக வந்த தமிழ் அதிகாரிகள் இச்சிலையை வைத்து ஆலயத்தை அமைத்து பரிபாலித்து வந்தனர். இருந்தும் சீரான பூஜைகள் இடம் பெற்றதாக இல்லை. இவ்வாலயத்தைச் சுற்றி 1000க்கும் மேற்பட்ட தமிழர் குடியிருப்புகள் இருந்தன. அம்பாறை நகரிலுள்ள நகர மண்டபமும் தமிழரின் கட்டடமாகவே இருந்தது. அதுமட்டுமல்ல அம்பாறைக்கு தொழில் நிமித்தம் வந்த யாழ்ப்பாணத்தவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். அம்பாறை நகரில் தமிழரின் கடைகள் இருந்தன.

காலவோட்டத்தில் நித்தியபூஜைகள் நடைபெற ஆரம்பித்த வேளையில் பல தடவைகள் இன வன்முறையில் இவ்வாலயம் சேதமாக்கப்பட்டது. குறிப்பாக 1983, 1990களில் இடம்பெற்ற மிகவும் மோசமான வன்முறைகளில் இவ்வாலயம் முற்றாகச் சேதமடைந்தது. ஆலயத்தினுள் சில துர்சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1990களில் இடம்பெற்ற இன வன்முறையில் இவ்வாலயத்திற்கு 53 இலட்ச ரூபா சேதம் ஏற்பட்டதாக மதிப்பீடு செய்யப்பட்டது. அதன்பிற்பாடு இவ்வாலயம் சோபையிழந்து நித்திய பூஜையின்றி காணப்பட்டது. நிரந்தரமான ஐயரும் இல்லை. பரிபாலன சபையினரும் இல்லை. இதனைக்கண்ணுற்ற தமிழ் உணர்வுகொண்ட தமிழ் பிரமுகர்கள் சிலர் ஒன்றுகூடி நிதிசேகரித்து ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்தனர். கும்பாபிஷேகத்தின் பொருட்டு தமிழ் ஊர்கள் தோறும் சென்று நிதி சேகரித்தனர். தமிழ் மக்களும் உதவினர் சிங்கள மக்களும் நிதி உதவி நல்கினர் என்று பரிபாலனசபைச் செயலாளர் பிரபல கவிஞர். நோ.மணிவாசகன் பூரிப்புடன் தெரிவித்தார். அத்துடன் உதவிய சகலருக்கும் நன்றியும் தெரிவிக்கிறார். அண்மைக்காலமாக இவ்வாலயத்திற்கு வரும் தமிழர்களை விட சிங்கள மக்களே அதிகம். அதிலும் சிங்கள இராணுவத்தினர் பயபக்தியுடன் வழிபட்டுச் செல்வதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. பிள்ளையாரின் அற்புதங்கள், பெருமைகள் 'கணபதி தெய்யோ என்ற வகையில் அவர்களையும் ஈர்த்ததில் வியப்பில்லைதான்.

**ஆக்கம்: வி. ரி. சகாதேவராஜா**

**(தினகரன் 2002ம் வருடம் மே மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை.)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்தினங்களும் - பிரதேசங்களும் - தொடர்பாளர்களும்.

## - 2003 -

| திருவிழா | திகதி | நாள் | பிரதேசம் | தொடர்பாளர் |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் 1ம் திருவிழா | 21/8/2003 | வியாழன் | சம்மாந்துறை பிரதேச மக்கள். | திருமதி.நாதபிள்ளை உடையார் தலைமையில் |
| 2ம் திருவிழா | 22/8/2003 | வெள்ளி | தம்பிலுவில் / திருக்கோவில் பிரதேசம் | திரு.வீ.மேகராஜா, ஜேபி தலைமையில் |
| 3ம் திருவிழா | 23/8/2003 | சனி | ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் | திரு.த.கைலாயபிள்ளை தலைமையில் |
| 4ம் திருவிழா | 24/8/2003 | ஞாயிறு | அம்பாறை மாவட்ட அரச ஊழியர்கள் | திரு.வி.மெய்யழகன் CC |
| 5ம் திருவிழா | 25/8/2003 | திங்கள் | சேனைக்குடியிருப்பு/ நற்பிட்டிமுனைமக்கள் | திரு.க.வெள்ளைப்போடி தலைமையில் |
| 6ம் திருவிழா | 26/8/2003 | செவ்வாய் | கல்முனை / பாண்டிருப்பு மக்கள் | திரு.சி.விவேகானந்தராஜா TO., தலைமையில் |
| 7ம் திருவிழா | 27/8/2003 | புதன் | நாவிதன் வெளி மக்கள் | பிரதேச செயலாளர் தலைமையில் |
| 8ம் திருவிழா | 28/8/2003 | வியாழன் | அம்பாறை / வர்த்தக சமூகம். | தலைவர், வர்த்தக சங்கம், அம்பாறை. |
| 9ம் திருவிழா | 29/8/2003 | வெள்ளி | மட்டக்களப்பு மக்கள் | திரு.வி.கருணாநாதன் (பொறியியலாளர்) தலைமையில் |
| 10ம் திருவிழா | 30/8/2003 | சனி | காரைதீவு மக்கள் | திரு.கே.வேல்நாயகம்/ அறங்காவலர் - காரைதீவு தலைமையில் |
| 11ம் திருவிழா தீர்த்தோற்சவமும் அன்னதானமும் | 31/8/2003 | ஞாயிறு | பரிபாலன சபை - அம்பாறை | நிருவாகம், ஆலய நிருவாகம், அம்பாறை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்தினங்களும் - பிரதேசங்களும் - தொடர்பாளர்களும்.**

# - 2004 -

| திருவிழா | திகதி | நாள் | பிரதேசம் | தொடர்பாளர் |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் 1ம் திருவிழா | 09/8/2004 | ஞயிறு | சம்மாந்துறை | சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிருவாகம் |
| 2ம் திருவிழா | 10/8/2004 | திங்கள் | தம்பிலுவில் / திருக்கோவில் பிரதேசம் | திரு.வீ.மேகராஜா, ஜேபி தலைமையில் |
| 3ம் திருவிழா | 11/8/2004 | செவ்வாய் | ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் | திரு.த.கைலாயபிள்ளை தலைமையில் |
| 4ம் திருவிழா | 12/8/2004 | புதன் | அம்பாறை மாவட்ட அரச ஊழியர்கள் | திரு.வி.மெய்யழகன். அம்பாறைமாவட்ட அரச ஊழியர்கள் சார்பாக |
| 5ம் திருவிழா | 13/8/2004 | வியாழன் | சேனைக்குடியிருப்பு/ நற்பிட்டிமுனைமக்கள் | திரு.க.வெள்ளையப்போடி தலைமையில் |
| 6ம் திருவிழா | 14/8/2004 | வெள்ளி | கல்முனை / பாண்டிருப்பு மக்கள் | திரு.சீ.விவேகானந்தராஜா TO., தலைமையில் |
| 7ம் திருவிழா | 15/8/2004 | சனி | நாவிதன் வெளி மக்கள் | பிரதேச செயலாளர் தலைமையில் |
| 8ம் திருவிழா | 16/8/2004 | ஞாயிறு | அம்பாறை / வர்த்தக சமூகம். | தலைவர், வர்த்தக சங்கம், அம்பாறை. |
| 9ம் திருவிழா | 17/8/2004 | திங்கள் | மட்டக்களப்பு மக்கள் | திரு.வி.கருணாதன் (பொறியியலாளர்) தலைமையில் |
| 10ம் திருவிழா | 18/8/2004 | செவ்வாய் | காரைதீவு மக்கள் | திரு.கே.வேல்நாயகம்/ அறங்காவலர் - காரைதீவு தலைமையில் |
| 11ம் திருவிழா தீர்த்தோற்சவமும் அன்னதானமும் | 19/8/2004 | புதன் | பரிபாலன சபை - அம்பாறை | நிருவாகம், ஆலய நிருவாகம், அம்பாறை |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா
உற்சவத்தினங்களும் ~ பிரதேசங்களும் ~ தொடர்பாளர்களும்

## - 2005 -

| திருவிழா | திகதி | நாள் | பிரதேசம் | தொடர்பாளர் |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் 1 ம் திருவிழா | 28/8/2005 | ஞாயிறு | வீரமுனை / சம்மாந்துறை மக்கள் | ஸ்ரீபாததேவி மாணவர் இல்லம் வீரமுனை |
| 2 ம் திருவிழா | 29/8/2005 | திங்கள் | தம்பிலுவில் / திருக்கோவில் | இரா.ஆனந்தராஜா தலைமையில் |
| 3 ம் திருவிழா | 30/8/2005 | செவ்வாய் | ஆலையடிவேம்பு மக்கள் | த.கைலாயபிள்ளை தலைமையில் |
| 4 ம் திருவிழா | 31/8/2005 | புதன் | மாவட்ட அரச ஊழியர்கள் | வி.மெய்யழகன் CC தலைமையில் |
| 5 ம் திருவிழா | 01/9/2005 | வியாழன் | சேனைக்குடியிருப்பு / நற்பிட்டிமுனைமக்கள் | க.வெள்ளைப்போடி தலைமையில் |
| 6 ம் திருவிழா | 02/9/2005 | வெள்ளி | கல்முனை / பாண்டிருப்பு மக்கள் | சீ.விவேகானந்தராஜா TO- தலைமையில் |
| 7 ம் திருவிழா | 03/9/2005 | சனி | நாவிதன் வெளி மக்கள் | எஸ்கோபாலரெத்தினம் DS- தலைமையில் |
| 8 ம் திருவிழா | 04/9/2005 | ஞாயிறு | அம்பாறை / வர்த்தக சமூகம் | Dr.NDC.குணசேகர தலைமையில் |
| 9 ம் திருவிழா | 05/9/2005 | திங்கள் | மட்டக்களப்பு மக்கள் | வி.கருணைநாதன் (பொறியியலாளர்) தலைமையில் |
| 10 ம் திருவிழா | 06/9/2005 | செவ்வாய் | காரைதீவு மக்கள் | கே.வேல்நாயகம்/ ஆர்.குணசிங்கம் தலைமையில் |
| 11ம் திருவிழா தீர்த்தோற்சவமும் அன்னதானமும் | 07/9/2005 | புதன் | காரைதீவு மக்கள் | கே.வேல்நாயகம்/ ஆர்.குணசிங்கம் தலைமையில் |

குறிப்பு :- நடந்து முடிந்தவைகள் ஆனாலும் மாற்றங்களுக்குரியது தொடர்பாளர்கள் அடிக்கடி மாறினாலும் பிரதேசங்கள் மாறவில்லை புதிய நிருவாகம் இது தொடர்பாக தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்தினங்களும் – பிரதேசங்களும் – தொடர்பாளர்களும்.

# - 2006 -

| திருவிழா | திகதி | நாள் | பிரதேசம் | தொடர்பாளர் |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் 1 ம் திருவிழா | 17/8/2006 | வியாளன் | வீரமுனை / சம்மாந்துறை மக்கள். | ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிருவாகம் |
| 2 ம் திருவிழா | 18/8/2006 | வெள்ளி | தம்பிலுவில் / திருக்கோவில் | இரா.ஆனந்தராஜா தலைமையில் |
| 3 ம் திருவிழா | 19/8/2006 | சனி | ஆலையடிவேம்பு மக்கள் | ஆலையடிவேம்புப் பிரதேச மக்கள் |
| 4 ம் திருவிழா | 20/8/2006 | ஞாயிறு | மாவட்ட அரச ஊழியர்கள் | வி.மெய்யழகன் RDD தலைமையில் |
| 5 ம் திருவிழா | 21/8/2006 | திங்கள் | சேனைக்குடியிருப்பு / நற்பிட்டிமுனைமக்கள் | க.வெள்ளைப்போடி, திரு தைரியராஜா அவர்களும் சேனைக்குடியிருப்பு மக்களும் |
| 6 ம் திருவிழா | 22/8/2006 | செவ்வாய் | கல்முனை / பாண்டிருப்பு மக்கள் | சீ.விவேகானந்தராஜா TO - தலைமையில் |
| 7 ம் திருவிழா | 23/8/2006 | புதன் | நாவிதன் வெளி மக்கள் | எஸ்.கோபாலரெத்தினம் DS - தலைமையில் |
| 8 ம் திருவிழா | 24/8/2006 | வியாளன் | அம்பாறை / வர்த்தக சமூகம். | Dr.NDC.குணசேகர தலைமையில் |
| 9 ம் திருவிழா | 25/8/2006 | வெள்ளி | மட்டக்களப்பு மக்கள் | வி.கருணாநாதன் (பொறியியலாளர்) தலைமையில் |
| 10 ம் திருவிழா | 26/8/2006 | சனி | காரைதீவு மக்கள் | கே.வேல்நாயகம்/ ஆர்.குணசிங்கம் தலைமையில் |
| 11ம் திருவிழா தீர்த்தோற்சவமும் அன்னதானமும் | 27/8/2006 | ஞாயிறு | பரிபாலனசபை | அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய நிருவாகம் |

# திருவிழா – 2007

***நாட்டில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை காரணமாகவும், போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற அசாத்திய நிலையிலிருந்தமையாலும் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது.***

-நிருவாகம் - 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்தினங்களும் ~ பிரதேசங்களும் ~ தொடர்பாளர்களும்.

## - 2008 -

| திருவிழா | திகதி | நாள் | பிரதேசம் | தொடர்பாளர் |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் 1 ம் திருவிழா | 24/8/2008 | ஞாயிறு | சம்மாந்துறை மக்கள். | ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிருவாகம்- வீரமுனை |
| 2 ம் திருவிழா | 25/8/2008 | திங்கள் | திருக்கோவில் பிரதேச மக்கள் | பிரபல வர்த்தகர்- திரு.இரா.ஆனந்தராஜா அவர்களும்/ தலைவர் இரா. கண்ணன், தம்பிலுவில் குருகுல நிருவாகமும் |
| 3 ம் திருவிழா | 26/8/2008 | செவ்வாய் | ஆலையடிவேம்பு மக்கள் | திரு.எஸ்.கரன் DS, (பிரதேசசெயலகம், ஆலையடிவேம்பு) |
| 4 ம் திருவிழா | 27/8/2008 | புதன் | கல்முனை / பாண்டிருப்பு மக்கள் | திரு. வீ.மெய்யழகன் + திரு.M.இராஜேஸ்வரன் (RDD) |
| 5 ம் திருவிழா | 28/8/2008 | வியாழன் | சேனைக்குடியிருப்பு / நற்பிட்டிமுனை மக்கள் | திரு.ரீ.வெள்ளையட்போடி + திரு.சி.தைரியராஜா (CEB) |
| 6 ம் திருவிழா | 29/8/2008 | வெள்ளி | பட்டிருப்பு பிரதேச மக்கள் | திரு.எஸ்.மகேந்திரன் அவர்கள்(RDD) கல்முனை |
| 7 ம் திருவிழா | 30/8/2008 | சனி | நாவிதன் வெளி மக்கள் | எஸ்.கோபாலரெத்தினம் DS (நாவிதன் வெளி பிரதேசசெயலகம்) |
| 8 ம் திருவிழா | 31/8/2008 | ஞாயிறு | அம்பாறை / வர்த்தக சமூகம். | Dr.NDC.குணசேகர அவர்கள் |
| 9 ம் திருவிழா | 01/9/2008 | திங்கள் | காரைதீவு மக்கள் | திரு.கே. வேல்நாயகம் - தர்மகர்த்தா - கண்ணகியம்மன் ஆலயம் - காரைதீவு. |
| 10 ம் திருவிழா | 02/9/2008 | செவ்வாய் | மட்டக்களப்பு மக்கள் | திரு.வி.கருணநாதன் (PD-RDD) அவர்கள் |
| 11ம் திருவிழா தீர்த்தோற்சவமும் அன்னதானமும் | 03/9/2008 | புதன் | கல்லோயா இந்து பரிபாலன சபை | அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய நிருவாகம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் நீத்தார் பெருமை

*மேகராஜா அழகேந்திரன்* (T.O) -நிருவாக உறுப்பினர்
*வீரசிங்கம் மேகராஜா* (T.O) - ஆலோசகர்
*கனகசபை பத்மநாதன்* (M.P) - பிரதித் தலைவர்

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் கோட்பாட்டில் பற்றுறுதியோடு செயற்கரிய சேவைகளை தத்தம் வாழ்நாட்களில் நிறைவேற்றி - புகழ்பூத்த பெருமக்களாக எம்மிடையே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த மேற்கூறப்பட்ட மூவர்களும் எமது அம்பாறை இந்து ஆலய பரிபாலன சபையின் முக்கியஸ்தர்களாவர். எமது ஆலய முகாமைச் சபையை நீண்ட காலம் அலங்கரித்தவர்கள். இவர்களது மறைவு, இந்து மக்களுக்கு மட்டுமல்ல - சகல இனமக்களுக்கும் துயர் தரும் இழப்பாகும்.

அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவிலானது 1990களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால்- பேரழிவுக்கு இலக்காக இருந்த காலத்தில், கோவிலை மீளவும் சீரமைக்க ஆலய திருப்பணிக் குழுவினர் சிலரோடு இணைந்து இப்பெருந்தகைகள் அர்ப்பணிப்புத் தன்மையுடன் ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

இம்மூன்று அமரர்களுக்கும் வல்ல இறைவனின் அருள் - ஆசிர்வாதம் கிடைப்பதாக

(நிருவாகம் - 2009)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளுரைகள்...!



☛ மனச்சாந்தியை இழந்தவர்கள், தன்னையும் உலகத்தையும் வெறுக்கின்றனர். அன்றியும் தான் கொண்டது தான் சரி என்ற ஆபத்தான பிடிவாத குணமுடையவராயும் இருப்பர். எனவே, தனக்கும் சமுதாயத்திற்கும் உபத்திரவம் இல்லாது வாழ மனச் சாந்தியை வளர்த்தெடுக்க வேண்டும்.

- **கெங்காதரானந்தா** -



☛ பொருளின் மீது நாட்டங் கொண்டவனுக்கு அருட் செல்வம் என்றும் எட்டாக்கனியாகும். திருவோட்டையும், செல்வமாகிய நிதியையும் ஒன்று போல காணும் உத்தமர்களின் நெஞ்சத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டிருப்பவன் இறைவன்.

- **தாயுமானவர்** -

☛ மன உறுதி இல்லாமையாலும் ஒழுக்கமில்லாமையாலும் தான் பொதுவாக மனிதர்கள் பொய் சொல்லுகின்றனர். மன உறுதியுள்ளவர்களுக்கு பொய் சொல்லும் அவசியம் வராது.

- **அரவிந்தர்** -



☛ எடுத்து வைத்தால் அவர் ஏற்கனவே உன்னை நோக்கி நூறு அடி எடுத்து வைத்திருப்பதை உணர்வாய். கடவுள் நம்மை அடைய எப்போதும் ஆவல் கொண்டவராய் இருக்கிறார். குழந்தைகளுக்கு நாம் கொடுக்கும் பொருளின் மதிப்பு தெரியாததைப் போல மனிதனுக்கு இறைவனிடமிருந்து பெறுவதன் மதிப்பு தெரிவதில்லை.

- **அரவிந்தர்** -

☛ குருவின் சக்தியின் மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக்கண்ட குரு "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிறதென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும் இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே" என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால் கால் வைத்தவுடன் மூழ்கி விட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்.



- **இராமகிருஷ்ண பரமஹம்சர்**

☛ நம் சரீரத்திற்கு எந்த வியாதி வந்தாலும், எந்த கஷ்டம் வந்தாலும் நிரம்ப வறுமையினாலே சிரமப்பட்டாலும் இவையெல்லாம் நமக்கு வைராக்கியத்தைக் கொடுப்பதற்காக சுவாமியினால் கொடுக்கப்பட்டவை எனக் கருத வேண்டும். இவையெல்லாம் "தபஸ்" என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.



- **காஞ்சிப் பெரியவர்.** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



☛ நான் அன்புக் கண்ணாடி அணிகின்றேன். விரும்பினாலும் என்னால் எவரையும் வெறுக்க இயலாது. என்னிடம் வெறுப்பும், வெஞ்சினமும் இல்லை. எச்சரிக்கவும் திருத்தவும் நான் சீறலாம். ஆனால், எப்போதும் வெறுப்பதில்லை. நான் ஆனந்தம். ஆனந்தம் மட்டுமே. நான் ஞனம், ஆனந்தம், சாந்தி! அது என் இயற்கை.

- **சத்தியசாய் பாபா** -



☛ என் உயிரையே காப்பாற்றி வைத்திருப்பது பிரார்த்தனைதான். பிரார்த்தனையின்றேல் நீண்ட காலத்திற்கு முன்பே எனக்கப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். பொது வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் மிகக் கசப்பான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டன என்பதை என் சுயசரிதையிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம். அவை எனக்குத் தற்காலிகமான மனச் சோர்வை உண்டாக்கின. எனினும், நான் அந்தச் சோர்வை அகற்றும் ஆற்றல் பெற்றிருந்தேனெனின் அதற்குக் காரணம் பிரார்த்தனை தான்.

- **காந்திஜி** -

☛ ஒரு மரக்கட்டையில் தீ வைத்தால் காடு முழுவதும் தீப்பற்றும் வரை அக்கட்டை எரியும். தீய இயல்புகளும் காட்டுத்தீ போன்றதே. தீயவர்கள் தம்மையும் அழித்துக் கொண்டு தம்மைச் சுற்றி இருப்பவர்களையும் அழித்து விடுவர். தங்கள் தீய குணங்களை தன்னைச் சுற்றிப் பரவச் செய்து நண்பர்களையும், உறவினர்களையும் நாசமுறச் செய்கின்றனர்.

- **சத்தியசாய் பாபா** -



☛ சிறிது நேரம் பக்தி செய்து விட்டு அதற்கு முழு நேர பலனை எதிர்பார்க்கின்றோம். மனதின் ஒரு பகுதியை கடவுளிடம் அளித்துவிட்டு அவரது முழுக் கருணையையும் வேண்டுகிறோம். இது பாதி வேலை செய்து விட்டு, முழுச் சம்பளம் கேட்பது போல் ஆகும். முழு மனதையும் அவருக்கு அர்ப்பணியுங்கள். நிச்சயம் கடவுளின் பூரண அருளுக்குப் பாத்திரமாவீர்கள்.

- **சத்தியசாய் பாபா** -



☛ சந்தனக்கட்டையை எவ்வளவு தேய்த்தாலும், அது தன் வாசனையிலிருந்து ஒரு சிறிதும் குறையாது. அதுபோல, பிறருக்குக் கொடுத்துதவி வாழ்வதில் இன்பம் காணும் நல்லவர்கள், தாங்கள் வறுமையில் வாடினாலும் தன் இயல்பான கொடுக்கும் பண்பிலிருந்து விலகமாட்டார்கள்.

- **ஔவையார்** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணிக்காக

அம்பாறைத் திருமண்ணில் ஐங்கரனார் கோவில்...
அனைவர்க்கும் வாழ்வளித்த அருளார்ந்த கோவில்...
தம்மோடு இசைபாடி நின்றோர்க் கெல்லாம்...
தக்கநலஞ் சேர்வளங்கள் சொரிந்த கோவில்...

***

தருக்கர்களால் தகர்ந்தின்று அழகு குன்றி...
துயர்மிகுந்த கோலத்தில் கைம்பெண் போலும்...
அருமையெனக் கொண்டிருந்த அரண்கள் வீழ...
அடையாளம் அழியுமொரு அவலம் காணீர்...!

***

பைந்தமிழர் தனித்துவத்தை உயர்த்தி நிற்கும்
பழங்கோவில் மாணிக்கப் பிள்ளையார் கோவில்...!
நொந்து மனம் வெந்துவிழ இடிபாடுற்று...
வழிபடவும் வாய்ப்பற்றுக் கிடக்கக் காணீர்...!

***

இந்து மக்கள் பெருமைதனை எடுத்தியம்பும்...
இயல்புடைய இக்கோவில் பௌத்த மக்கள்
சிந்தைமகிழ் வோடு வந்து வழிபடுங் கோவில்...
சீரழிந்து போகாமல் காப்போம்...வாரீர்...!

***

இந்துமக்கள் தொன்றுதொட்டு வாழ்ந்திருந்த பூமி...
இது ஈங்கோர் இதயம் போல்... இந்துக்கோவில்...!
சந்துபொந்து அல்ல இது சரித்திரத்தின் சின்னம்...
சீராக்க எழுகநிதி நன்கொடைகள் தந்தே...!

***

திருப்பணிக்கு உதவிடுவோர் வரலாறு காண்பர்...
திருவருளால் வாழ்வில் நிதம் உயர்வுகளைக் காண்பர்...!
அரும்பணிகள் செய்திடுவோம் வாழும் வரை வாழ்ந்து
ஆனைமுகனார்பாதம் சரணடைவோம், வீழ்ந்து...!

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் சிதைவுற்ற கோலங்கள்
(அவலங்கள்)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் சிதைவுற்ற கோலங்கள்
(அவலங்கள்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் சிதைவுற்ற கோலங்கள்
## (அவலங்கள்)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் இப்போதய அழகிய தோற்றங்கள







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் வருடாவருடம் நடைபெற்றுவரும் சங்காபிஷேக நிகழ்வுகளின் காட்சிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் வருடாவருடம் நடைபெற்றுவரும் சங்காபிஷேக நிகழ்வுகளின் காட்சிகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் வருடாவருடம் நடைபெற்று வரும் தீர்த்தோற்சவ நிகழ்வுகளின் காட்சி



### கற்பகக் கடலே

*"எல்லோரும் தலைசாயும் இறைவா! போற்றி*
*எப்பொருளும் நீயான தலைவா! போற்றி*
*நல்லாரும் பொல்லாரும் நலமே வாழ*
*நடு நிலமை நின்றிலங்கும் நயன சோதி*
*கல்லாரோடு கற்றவரின் கருத்துக் கேற்பக்*
*கருணைசொரி கற்பகக் கடலே! போற்றி*
*சொல்லாலும் செயலாலும் சுகமே காட்டும்*
*சுத்தனே! சுகுணகுணத் துரையே! போற்றி"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாறை
ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்

கல்வெட்டு ~ ஊஞ்சல் திருப்பாடல்களும்
இரட்டை மணிமாலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஊஞ்சல்.

## காப்பு

சீராருஞ் சிவனுமையாள் சிந்தித் தீந்த
திருவாரும் ஆனைமுகச் செல்வா என்றும்
பேராருங் கருணைமழை பொழியுந் தேவே
பிஞ்ஞகனும் வேண்டிநிற்கும் பெரியோய் மண்ணில்
ஏராரும் அம்பாறை எம்மான் நின்னை
எழிலூஞ்சற் பதிகத்தா லெளியேன் பாடப்
பாராரும் பாரதத்தைப் பண்பாத் தந்தோய்
பணிகின்றேன் நின்னருளைப் பாலிப்பாயே.

## நூல்

1 துய்யமறை நால்வேதத் தூண்கள் நாட்டித்
தூய சிவா கமமாகும் வளைகள் பூட்டிச்
செய்ய பொரு ளுபநிடதப் பலகை வைத்தே
சீர்திகழும் வேதாங்க வடங்கள் கோத்துச்
செய்திட்ட பிரணவமாம் பீடத் துற்றே
திருமருவும் அம்பாறைப் பதியில் மேவும்
எய்தருஞ்சீர் மாணிக்கப் பிள்ளையாரே
இன்பருளுங் கற்பகமே அடீரூஞ்சல்.

2. வெண்கதிருஞ் செங்கதிருங் குடைமீ தேந்த
விதியினோடு மாலிருபாற் கவரிவீச
விண்ணவர்பாங் கரிலால வட்டம் தாங்க
மேன்மையொடும் உடுக்கணங்கள் தீபங் காட்ட
பண்ணமையுங் கின்னராயா ழிசையு மோங்கப்
பசுக்கள்மலி யம்பாறைப் பதியில் மேவும்
எண்ணருஞ்சீர் மாணிக்கப் பிள்ளையாரே
இணையிலாப் பரம்பொருளே ஆடீரூஞ்சல்

3. இந்திரன்மா மதலையொரு களாஞ்சியேந்த
எழிலரம்பை மடமாதர் நடன மாடக்
கந்தருவர் மாதரொடுங் கானம் பாடக்
கற்பனைசால் நாரதன்யாழ் இசைமீக் கூரப்
பந்தமறும் அம்மையப்பர் பரிந்து காணப்
பைம்புனமா ரம்பாறைப் பதியில் மேவும்
அந்தமில்சீர் மாணிக்கப் பிள்ளை யாரே
அநாதி நித்ய விநாயகரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சல்லரியுந் தண்ணுமையுந் துடியுஞ் சங்கும்
தழிங்குமியம் பலவிசைத்துக் கணங்களாட
பல்லவமும் நாண்மலரும் பாதந் தூவப்
பகவதியும் இந்திரையும் வடந்தொட்டாட்ட
வல்லபையும் வந்தருள் செய் குறிப்பிற் சார
வனம்பொலியு மம்பாறைப் பதியில் மேவும்
நல்லருள் செய் மாணிக்கப் பிள்ளையாரே
நாமடியோம் எமைக்காக்க ஆடீரூஞ்சல்.

5. எண்ணரிய வேதத்தி னிசைகள் பாடி
இருமருங்கும் பூசுரர்கள் ஏந்திப் போற்ற
விண்ணவரும் மண்ணவரும் விரவிப் போற்ற
விஞ்சையரு முனிவரரும் முற்போந் தேத்த
பண்ணுசெந் தமிழ்மறையாற் பத்தர் போற்றப்
பழம்பதியா மம்பாறைப் பிள்ளையாரே
நண்ணருஞ்சீர் மாணிக்கப் பிள்ளையாரே
நாயகனே நற்குருவே ஆடீரூஞ்சல்

6. ஆகமெங்குஞ் சராசரங்க ளடங்கக் காட்டி
அவையெல்லாங் கடந்து நிற்கு மருளுங் காட்டி
போகமுடன் முத்திநெறி பொருந்தக் காட்டி
புண்ணியர்க ளேறுசிவ லோகங் காட்டி
பாகமதில் வல்லபையைக் கொண்ட கோலப்
பராபரனே யம்பாறைப் பதியில் மேவும்
மேகவண்கை மாணிக்கப் பிள்ளையாரே
மேவுமெங்கள் வினை தீர்த்தே ஆடீரூஞ்சல்

7. முடிமீதே செறிந்தமணி ஒலியை வீச
முக்கணொளி எத்திசையும் அருளை வீச
படிமீதே யிருசெவியும் பரந்து வீச
பக்தர்குழா மெம்மருங்கும் பரவிப் போற்ற
அடிமீதே தண்டைசிலம் பொலியை யார்ப்ப
ஆலயங்கொ ளம்பாறைப் பதியில் மேவும்
பொடியணிகொள் மாணிக்கப் பிள்ளையாரே
புகுவறுமை போக்கிடவிங் காடீரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாசமுட னங்குசங்கை பரித்தசெல்வா
பண்ணவனே ஐங்கரனே ஆடீரூஞ்சல்
நேசமுடன் மோதகமுங் கோடுமேந்தும்
நின்மலரே கண்ணுதலே ஆடீரூஞ்சல்
பேசுமறை ஆகமஞ்சொல் பிரானே யெங்கள்
பெருங்களிறே அம்பாறைப் பகுதியில்மேவும்
தேசமர்சீர் மாணிக்கப் பிள்ளையாரே
தீவினைதீ ரருமருந்தே ஆடீரூஞ்சல்

9. ஓங்காரத் தனிமுதலே ஆடீரூஞ்சல்
உம்பர்தொழு முத்தமனே ஆடீரூஞ்சல்
நீங்காத பரவொளியே ஆடீரூஞ்சல்
நெடியோற்கு வரமளித்தோய் ஆடீரூஞ்சல்
தேங்காருஞ் சோலைகளுங் கரும்பும்நெல்லும்
சிறந்துவள ரம்பாறைப் பதியில்மேவும்
பாங்கார்சீர் மாணிக்கப் பிள்ளையாரே
பரமுத்தி ஈந்தருள்வோய் ஆடீரூஞ்சல்

10. திரிபுரிநூல் மார்பிலங்க ஆடீரூஞ்சல்
திருவுத்த ரியமிலங்க ஆடீரூஞ்சல்
பருவுதர பந்தனஞ் சேர்ந் தாடீரூஞ்சல்
பைம்பொன்மணி யாரமசைந் தாடீரூஞ்சல்
பெரிதுநலி கடன் தீர்த்தே ஆடீரூஞ்சல்
பெட்புறுகோட் டலரணிந்தம் பாறைமேவும்
அருவரத மாணிக்கப் பிள்ளையாரே
அறுமுகவன் முன்னோனே ஆடீரூஞ்சல்.

11. சத்தியுமாய்ச் சங்கரனாய்ச் சார்ந்தோய் வாழி
சண்முகமாஞ் சதாசிவமாந் தகையோய் வாழி
முத்தியுநல் லமுதமுமாம் முனைவா வாழி
மூவருமாய் மகேசனுமாய் முளைத்தாய் வாழி
புத்தியுமாய்ச் சித்தியுமாப் பொலிவோய் வாழி
பூரணனாய் அம்பாறைப் பதியை மேவி
நித்தியங்காண் மாணிக்கப் பிள்ளையாரே
நிருத்தஞ்செய் கணபதியே வாழி வாழி

முற்றிற்று

*(இப்ப பாடல் பண்டிதரும் வித்துவானும் சைவப்புலவருமாகிய திரு. சி. சரவணமுத்து அவர்களால் இயற்றப்பெற்றதாகும்.)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்
# இரட்டை மணிமாலை

(காப்பு)

## - கட்டளைக் கலித்துறை -

அருவே முதலா அரனுரு வெல்லாம் அகத்தடக்கும்
உருவாம் பிரணவ ஓருருக் கொண்ட ஒரு முதல்வ
மருவார் மருதத்து எம்பாறைக் கோயிலில் வாழ் கணேச
திருவார் மலரடி சிந்திப்பன் பாமாலை செய்திடவே.

சிந்தித்து வள்ளி தினைப்புன நண்ணித் திருமணங்கொள்
கந்தப் பெருமான் உசன்பதி மேவுமென் கண்மணியே
வந்திப்பன் நின்கழல் மாணிக்கப்பிள்ளையார் மாலையின் கண்
சிந்தைக் கினிய பொருட்சுவை சொற்சுவை சேர்த்தருளே

பணியினைப் பாய்நதிக் கங்கையை நுண்ணொளி பாய்மதியின்
அணிகலை யொன்றினைக் கொன்றையந்தாரினை யங்கமல
மணிமல ரென்ன அயன்சிர மாலையை யஞ்சடைகொள்
பணிதர ஈக இரட்டை மணிமாலை பாடுரனே.

## நூல்

1. ஏர்விளங்கு மம்பாறை எம்மானை மாணிக்கப்
பேர்விளங்கு மானைமுகப் பெம்மானைச் - சீர்விளங்கும்
விண்ணவருங் கைகூப்ப வேண்டுவரந் தந்தருள்வன்
மணணுலகும் போற்ற மகிழ்ந்து.

2. மகிழ்ந்தன் புடனே வழிபடு வாரிந்த மாநிலத்தோர்
புகழ்ந்தன் புறுவர்கள் பூசுரர் வேதங்க ளேத்தெடுத்தே
இகந்தும்பர் நாட்டினை ஈண்டுவந் தேத்துவ னிந்திரனும்
அகழ்ந்தெங்க ளாணவ வேர்பறித் தின்னிணி யாண்டருளே

3. ஆண்டருள் வானென்றே அப்பமுடன் முக்கனிகள்
வேண்டுபல காரமும் வெங்கரும்பும் - ஈண்டவைத்தே
மாணிக்கப் பிள்ளையார் மன்னுபெருங் கோவிலினைப்
பேணுவார் பெற்றிடுவார் பேறு.

4. பேறுபெற் றின்பார்வர் பேராகு வாகனன் பேரருளால்
ஆறுவற் றாக்குளம் அன்னத்தைப் பாலிக்கு மாதலினால்
நீறுவற் றாவன்பர் நெற்போர் மலையுடன் குன்றுகளும்
மாறு பெற் றோங்கிட மஞ்சுறங் கும்பதி மன்னவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மன்னவனே நோய்தீர்க்கு மாமருந்தே யென்றுன்னைப்
பன்னிப் பரவுமிசைப் பாக்கேட்டே - துன்னுகரி
நல்லுத் தரவாயில் நாடினகா ணானைமுகா
நல்லருளை நல்காய் நயந்து.

6. நயந்தருள் வாயென்று நானிலத் தேவட நிழலிலே
பயந்தவம் மாலுன்றன் பாதங்க ளேத்திப் பயனடைந்தான்
கயந்தனை மாய்ந்த கணபதி யேயென்றன் கண்மணியே
வியந்துரை யன்றிது மெய்ப்பதந் தந்தெனை மீட்டருளே

7. அருண்மா மயிலேறி ஆறுமுக னந்நாள்
வலமா உலகு சுற்று முன்னே - விரகாகத்
தந்தைதாய் சூழ்வந்து தனிமாங்கனி பெற்றாய்
மைந்தாநின் றாளருள்வாய் வந்து.

8. வந்துவந் தேநின் மலரடி வந்தித்த வானவர்மன்
சிந்தை மகிழ்ந்திடக் காவிரி சீகாழி சேர்ந்துசெலச்
சந்தக் குடகி லகத்தியன் குண்டிகை சாய்த்தமவனே
பந்த வினையெமைப் பற்றம லோம்பெமைப் பற்றி நின்றே

9. பற்றி நின்ற பாவங்கள் பாற்றுதலே பற்றாயின்
பற்றுமினோ தஞ்சமாப் பாரகத்தீர் - முற்றுணர்ந்த
மூர்த்தியினை யம்பாறை முன்னோனை ஐங்கரன்றன்
சீர்த்திசொலி வீழ்க அடிச் சென்று.

10. சென்றிடு சுந்தரற் பின்றொடர்ந் தேகைலை சேரவெண்ணி
வென்றிடு மாவேறுஞ் சேரமான் போற்செல வேண்டியெளவை
நின்னடிப் பூசை விரைந்திடல் மாற்றிநீ டைங்கரனே
அன்னவர் முன்கைலை ஒளவைக் கருணினைந் தேத்துவமே.

11. ஏத்துமின் பத்தர்கா ளிம்மையோ டம்மையினும்
காத்தின்ப நல்கிக் களிப்புறுப்பான் - மாத்துயரைப்
போக்குவான் பாசமும் போனகமுங் கைக்கொண்டான்
நாக்கொண்டே ரம்பன்சீர் நன்று.

12. நன்கிருந் தானிங்கு நாற்றிசை மாந்தரும் நங்கழலைப்
பொங்கிடு மல்லற் பிறவியைப் போக்கிடப் போற்றியெமை
துங்க நியம நெறி நின்று நாளுந் தொழுக வெனப்
பங்கமில் மோதகக் கைவர தங்காட்டும் பண்ணவனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 பண்ணவனே முத்திநிலை பாரிக்கும் மாரியனே
விண்ணவருங் காணா விழிப்பொருளே - மண்ணதனில்
அம்பாறை மேவி அடியேமை யாண்டருளும்
எம்மான் இடர்களைவா யிங்கு.

14. இங்கிருந் தும்பர்க் கதிபனு மாலயன் யாவருமே
தங்குறை தீரத் தவம்புரிந் துன்னருள் சார்ந்தனரால்
எங்குறை யாவையுந் தீர்த்திரும்ப ராண்டுகொண் டின்னடியில்
பங்குறை பான்மையி னைங்கர பேரின்பம் பாலியுமே

15. பாலிக்கு கைங்கரநிற் பராவன்ப ருன்னருளைக்
கோலித்தஞ் சிந்தைக் குள நிறைத்துச் - சாலியெனும்
ஞானம் வளர்த்ததனால் நற்பர போகந்துய்க்கும்
மோனத் தமிழ்வர் முயன்று

16. முயன்று வரம்பெற வேட்பீர் விநாயக முன்னவனை
அயனு மரியு மரனும் படைப்பளிப் போடழித்தற்
செயம்பெறச் செய்சிந்தை செவ்வேட்டு வள்ளி திருமணத்தை
நயந்தருள் பாலித்த நம்பனைப் போற்றிட நண்ணுமினே

17. நண்ணினர்க்கு நல்லனென்று நாடோறும் நானிலமும்
விண்ணுலகும் போற்றும் விழுப்பொருளைக் - கண்குளிரக்
கண்டுதொழ வாரீர் கருணைமழை வெள்ளத்தின்
விண்டுவினை கூடிடுவீர் வீடு.

18. வீட்டினை வெஃகிடு விண்ணவர் பேறுகள் வேண்டியிந்த
நாட்டினை நாடிட நன்னெறி காட்டுநல் லாறுகள் பாய்
காட்டுறை மாணிக்கப் பிள்ளையா ரேயன்பர் கற்பகமே
பாட்டினுக் கின்னருள் பாலிப்பீ ரென்றுமைப் பாடுதுமே

19. பாடுவதும் வானவர்கள் பற்றினா லுன்னருளை
நாடுவதும் தாம் வாழ்வான் நன்றிறவாய் - நாடியிங்கே
ஆடுவதும் பாடுவதும் அப்பனே யானின்னை
வீடுபெற வென்றன்பால் வேண்டு.

20. வேண்டுதும் யாமென்று விண்ணவர் நாடிட வேண்டியெமை
மாண்புறு மாணிக்கப் பிள்ளையாரெங்கள் மணிமருந்தாய்க்
காண்டொறு மின்பங் களித்தூ றமிர்தாய்க் கலந்த நட்பாய்
தாண்மலர்ப் பூசை நயப்பரம் பாறைநல் லேருறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்பாறை ஸ்ரீ மாணிக்க விநாயகருக்கு காணிக்கை**

## தெய்வ வணக்கம்

**"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன் ஞான குரு வாணிபதம் நாடு"**

# காணிக்கை

01. முப்பொருளூட்டும் - முக்கண்ணா யென்னை
இப் பொழுதெழுந்தே - ஏற்க நீ வருக!

02. கடலலை கண்ட - கலங்கரை போல
மடல் விரி மலர்கள் - மகிழ்ந்தே யாடும்.

03 கங்கைக் கரையில் - கயல் துளியாட
எங்கள் முதல்வா! - எழில் பெருந்தலைவா.

04. மங்கை யுமையாள் - மகிழ்ந்தே யணைத்த
கொங்கை தழுவாக் - குமரா! வருக!

05. முப்பழம் பாலும் - முழு அவல் கடலை
இப்போ படைத்தேன் - எழுந்து நீ வருக!

06. அப்பா வருக! - அழகா வருக!
இப்போ வருக - எழிலோய் வருக!

07. மூலப் பொருளின் - முதல்வா வருக!
ஞானந் தளைத்து - நயம் பெற வருக!

08. அம்பாறை அமர்ந்த - அரசே! வருக!
வெம்பாவம் போக்கும் - விமலா வருக!

09. தும்பிக்கையோடு - துணை செய்ய வருக!
நம்பித் துதித்தேன் - நலந்தர வருக!

10. வருக! வருக! - வரம் பல தருக!
அருகா யென்னை - அணைக்க நீ வருக!

11. கல்லோயாச் சபையின் - கண்மணி யென்று
எல்லோரும் போற்றும் - இறையே! வருக!

12. மற்போர் புரியும் - மதகரிக் கூட்டம்
சுற்றித் திரியும் - சுந்தரா வருக!

13. மாடு கேட்டோர் - முகம்மது செய்த
கேடு கண்டு - கிழித்தோய் வருக!

14. மிஞ்சார விளக்கு - விண்மீ னென்ன
துஞ்சா தொழிருந் - துரையே! வருக!

15. காடுமலை நதியும் - கண்டு களிக்க
மாடு வளர்க்கும் மகேசா! வருக!

16. பறக்கும் விமானம் - பத மலர் தேடிச்
சிறகை விரிக்கும் - செல்வா வருக!

17. வாவியின் அழகை - வருணணை செய்யும்
பூவினங் கொண்ட - புனிதா வருக!

18. வருக! வருக! - வணங்கிட வருக!
பெறுக வரங்கள் - பெற்றிடத் தருக!

19. அம்பாறையிலிருந்து - அவரவர் செய்த
வெம்பாவந் தீர்க்கும் - விமலா! வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கும்பிடும்கைகள் - கோடிக் கணக்காய்
நம்பித் துதிக்கும் - நாதனே! வருக!
21. ஆணும் பெண்ணும் - அணியணி நின்று
காணும் செல்வக் - கணேசா! வருக!
22. வேதத்தின் உண்மை - விளங்கிடச் செய்து
பாதத்தை நானும் - பணிய நீ வருக!
23. ஆயிளை யார்கள் - ஆலாத்தி யேந்தி
கோயிலை வணங்கும் - குமரா! வருக!
24. ஆரியர் செய்யும் - அபிஷேகங் கண்டு
நேரினி லிருக்கும் - நிமலா! வருக!
25. ஆவின் பாலும் - அழகிய தேனும்
தூவி வணங்கித் துதிக்க நீ வருக!
26. கரும்பை விரும்பும் - கஜமுகத்தோனே
விரும்பி யென்வினை - விலக்கிட வருக!
27. அவலொடு கடலை அள்ளிப் படைத்தேன்
பவ வினை தீர்க்கும் - பரமனே! வருக!
28. மோதகமேந்தி - முத் தொழில் புரியும்
நாதனே! யெனக்கு - நலந்தர வருக!
29. உலகைச் சுற்றி - ஒரு நொடி வந்தாய்
மலர் கொடு பணிந்தேன் - மகிழ்ந்து நீ வருக!
30. ஓங்காரத்தின் - உள்ளொளி காட்டி
நீங்கா திருக்க - நின்னருள் தருக!
31. ஆலயமின்றி - அமர்ந்த நாளையில்
சோலைகள் சூழச் - சுகமுட னிருந்தாய்!
32. அம்பது ஆண்டின் - அந்தத்தின் முன்பு
அர்ச்சனை செய்தார் - அவரவ ரும்மை.
33. ஆனைகள் கூடும் - அழகினைக் கண்டு
பானை வயிற்றுடன் - பார்த்து நீ யிருந்தாய்
34. குளக்கரை யோரங் - கொக்கொடு குருவி
கொஞ்சிக் குலவ - குறுநகை செய்தாய்!
35. கும்பிட வந்தோர் - குறை பல சொல்லி
நம்பி நடந்தார் - நலமதைச் செய்தாய்!
36. தண்ணி ரள்ளித் - தலையினில் சொரிந்து
பண்ணிய பூசை - பார்த்தினி திருந்தாய்!
37. கண்ணின் மணியே - கற்பகக் கடலே
விண்மொழி யென்று - வியப்புரை கூறி,
38. பட்டாடை சுற்றிப் - பந்தரு மிட்டு,
கட்டுக் கடங்காக் - கவிபல சொல்லி,
39. பொட்டும் வைத்துப் - புகழ் மாலை சூடி
குட்டி வணங்கிக் - கும்பிட்டா ரப்போ.
40. வெள்ளியினுன்னை - அள்ளித் துதித்தார்
உள்ளங் கனிந்தாய் - உவகையுங் கொண்டாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. சொன்னதைச் செய்தாய்! - சொல் தவறாமல்
அன்னம்போ லறிவு - அகத்திலே கொண்டு,
42. வானம் பாடி - வரி வரியாக்
கனம் பாடக் - களிப்புடனிருந்தாய்.
43. மந்திகளோடு - மதகரிக் கூட்டம்
அந்தியில் கூடும் அழகினைக் கண்டாய்
44. இன்னமும் இருந்து - இறை புரிகின்றாய்
கன்னனே! கற்பகக் - கடவுளே யென்ன
45. மன்னனாய் இருந்து - மகிதல மாளும்
தன்னையுமுள்ள - தலைவனுமானாய்
46. ஆங்கில ஆட்சி - அமைந்த நாளையில்
மூழ்கில்போ லுயர்ந்த - முதல்வ ரொருவர்
47. "ஊர்சிலி" யென்று - உரைத்திடும் "ஜீ.ஏ."
சீரதைக் காணச் - சிந்தை தான் கொண்டு
48. அம்பாறை வந்து - அடைந்த வேளையில்
தும்பிக்கை யானின் - தோற்றத்தைக் கண்டு,
49. இங்கிதை வைக்க - ஏற்கா தென்று
கங்கையில் தூக்கி எறிந்திடச் சொன்னார்.
50. சுந்தரங் காடியார் - சொற்றவறாமல்
சிந்தை தான் நொந்து - செய்திடப் பணித்தார்.
51. பாரதந் தீட்டிய - பரப் பெரும் பொருளே!
ஆரினைச் சாருமோ - அபயம்! அபயம்!
52. என்று துதித்து - எடுத்தோர் தோணியில்
கன்று போல் நின்ற - கழிற்றினைக் காட்டி
53. வாவியைச் சுற்றி - வடிவினை யூட்டி
ஆவிபோ யங்கே - அசைவிலா திருந்தார்.
54. அந்தக் கரையின் - அழகினைக் கண்டார்
மந்தர மலை போல் - மதகரிக் கூட்டம்
55. கரையிலிறங்கினார் - கால் நடையாக
தரையினி லிங்கே - தற்பரா நீயும்,
56. அரையினில் சல்லெனும் - ஆடை தானணிந்து
கரையேறி யிருந்தாய் - கண்டார் பயந்தார்.
57. தூக்கி யெடுத்து - துதி பல பாடி
வாக்கினில் வைத்து - வணங்கிடச் சொன்னார்.
58. தம்பி நாத பிள்ளையின் - தந்தையாய் வந்த
நம் பிடும் நாக - மணியெனும் உடையார்.
59. தோம்புதோர் வேலுப் பிள்ளையினோடு
சேர்ந்தாரே நல்ல - தம்பியுங் கூட
60. முத்தையாச் செட்டி - முழுமன மாகச்
சித்தந் துடித்து - சினம் மிக்க கொண்டு,
61. பக்திப் பரவசப் - பாமாலை பாடியும்
முத்திக் கணபதி - முறை கேளாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. வீரமுனை ஊரின் - வித்தாரக் கவிஞ்ஞன்
மாரனையே வென்று - மறுவுலகடைந்த
63. கந்தையாச் சாமி - கண்ணீர் சொரிந்து
வந்தனை செய்து - வரமதும் பெற்று,
64. அப்பா கணபதி - அரகரா கணபதி
இப்போ கணபதி - எழுந்திரு கணபதி.
65. என்று தான் கூறி - எடுத்தா ரணைத்து
நன்றென வினாயகர் - நகர்ந்தாரே யப்போ.
66. ஆயிரங் கல்லால் ஆக்கிய மேடையில்
பாயிரம் பாடி - பல்லாண் டிசைத்து,
67. சண்முகச் சாமி - சதுரங்களாட
கண்முன் றுடைய - கணேசனை வைத்து,
68. மலர்பல கொண்டு - மாலைக ளிட்டு
புலனெலாம் போக்கி - பூசைகள் செய்தார்.
69. அரோக ரோகரா - அரோக ரோகரா
அரோக ரோகரா - அரோக ரோகரா

**வேறு**

70. அன்றிருந்தா யப்பா - அந்த நிலைதனிலே
இன்று நினைக்க - என்ன குறையிருக்கு
71. எட்டெட்டுத் திக்கோடு - ஈரெட்டுக் கோணங்களும்
தொட்டு வணங்கித் - துதிகள் பல பாடி
72. வேட்டைத் திருவிழாவும் - வெவ்வேறு காட்சிகளும்
காட்டிக் களியாடக் கண்டிருக்காய் கண்ணெதிரே
73. முத்து ரதங்கள் - முன்னே நடந்து வர
ஒத்தூதும் நாதசுரம் - ஒன்றோடொன் றெதிர்போட
74. ஏழு நிறத்தின் - எழிலான வல்ப் புடனே
மூழுங் கற்பூரம் - முன்னே யெரியுதப்பா,
75. பட்டாடை போட்டுப் - பவனி நடக்கையிலே
கொட்டாவி விட்டுக் - குந்தியிருக்காமல்,
76. அன்ன தானத்தின் அழகு தனைப் பார்த்து
என்னை மறக்காமல் - எதிரோடி வாராயோ,
77. நாயேன் மெலிந்தேன் - நன்மை தர வருக!
ஓயேன் ஒரு நாளும் - உனைத் துதியாமல்
78. குறையெடுத்துச் சொன்னேன் - குற்றம் நினையாமல்
நிறையருளைத் தந்து - நிறுத்த வருவாயோ!

ஐயா சரணம் - அரன்மகனே! தாழ்சரணம்
சரணம் சரணம் சண்முகனின் அண்ணனுக்கு
அம்பாறை மேவும் அண்ணலே தாழ்சரணம்
வெம் பாவம் போக்கும் விமலா சரணுனக்கே!

ஆக்கம்:- புலவர். க.அம்பிகாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



New Selection offset, Akp. 0672278855

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org